# பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.


| மாலை 3 | ஞாயிறு 5-11-39 பிரமாதி௵ ஐப்பசிமீ 20உ | முத்து 6 |
|---|---|---|


## பொருள் அடக்கம்


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| உலக வர்த்தமானம் | ... ... ... ... ... ... | 180 |
| தீபாவளி | ... வரகவி திரு அ. சுப்ாரமண்ய பாரதி | 182 |
| கடலோரக் கிளிஞ்சல்கள் | ... ... ... ... ... ... | 184 |
| மைசூரின் முன்னேற்றம் | ... ... ... ... ... ... | 185 |
| ரஷ்யாவின் முடிசூடா மன்னன் | ... ... ... ... ... | 186 |
| நமது ஸங்கீதம் | ... ... ஏ. என். கலியாணசுந்தரம் | 187 |
| கதிரியக்கம் | ... ... ... ஆர் கே விஸ்வநாதன் எம். ஏ. | 191 |
| சீட்டுக்கச்சேரி | ... ... ... ... டி. எஸ். ரமணி | 193 |
| செம்படவன் சொன்ன கதை | ... எஸ். லக்ஷ்மிநாராயணன் | 195 |
| நான் ராஜாவாக இருந்தால்? | பெ. நா. அப்புஸ்வாமி அய்யர் பி.ஏ., பி.எல்., | 197 |
| சினிமாச் சுருள் | ... ... ... ... ... ... | 202 |


"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

# உலக வர்த்தமானம்

### அயல் நாடுகளில்

ஐரோப்பாவில் மேற்கெல்லையில் போற்றத்தக்க செய்திகள் ஒன்றும் கிடைக்கவில்லை. சண்டை நடந்து கொண்டிருக்கிறதென உலகம் அறிவதற்காக "அங்கே இரண்டு துப்பாக்கிச் சத்தமும், இங்கே இரண்டு குண்டுச் சத்தமும் கேட்டது." என்று நடுநிலைமை வகிக்கும் நாடுகளிலிருந்துசெய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. இதைத் தவிர வேறுயுத்த விசேஷம் ஒன்றுமில்லை. ஆனால் அங்கே குளிர் காலம் ஆரம்பித்துவிட்டதாம். ஜெர்மானியர், அவர்கள் வெட்டிய அகழிகளில் படகு விட்டுக்கொண்டு செல்கிறார்களாம். ஜெர்மன் யுத்த வீரர்களெல்லோரும், சரியான ஆகாரம் கொடுப்பதில்லையென்றும், சரியான உடைகள் கொடுப்பதில்லையென்றும் குறைகூறிக் கொண்டு வருகிறார்களாம்.

பல்கேரியாவில் மந்திரிசபை கலைக்கப்பட்டது. மந்திரிசபை கலைக்கப்பட்டாலும், அந்நியநாட்டுடன் வைத்துக் கொண்டிருக்கும் சம்பந்தத்தில் எவ்வித மாறுதலும் ஏற்படப்போவதில்லையெனத் தெரிகிறது.

ரஷ்யா, பால்டிக் நாடுகளில் இன்னும் ஆர்ப்பாட்டஞ் செய்துகொண்டுவருகிறது. பால்டிக் கடலிலுள்ள லீபா என்னும் தீவைப் பிடித்துவிட்டது. சோவியத் லாத்வியா ஒப்பந்தத்தினால் ரஷ்யக் கப்பற்படை தங்குவதற்காக லீபா தீவு கொடுக்கப்பட்டிருக்கிறதாம்.

"ஸிடி ஆப் பிளிண்ட்" என்னும் அமெரிக்கக் கப்பல் கடலில் செல்லும்பொழுது ஜெர்மனியக் கப்பல்களால் பிடிக்கப்பட்டது. பல நடுநிலைமை வகிக்கும் நாடுகளின் கப்பல்கள் தகர்க்கப்பட்டன. பல பிரிட்டிஷ் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. இதுவரையிலும் பிரிட்டனுக்குக் கப்பல்கள் மூழ்கியதினால் பெருத்த நஷ்டம் ஏற்பட்டாலும், "எங்களுக்கு அப்படி ஒன்றும் பெருத்த நஷ்டம் ஏற்படவில்லையென" பிரிட்டன் பெருமை பேசிக் கொள்கிறது. ஜெர்மன் தேசத்துப் பல யூ-போட்களும் பிரிட்டிஷ் கப்பல்களால் நாசஞ் செய்யப்பட்டனவாம்.

300 இந்திய மாலுமிகள் ஜெர்மானியர்களால் சிறை பிடிக்கப்பட்டனர். இவர்களெல்லோரும் பல கப்பல்களிலிருந்தவர்களாம். இந்த வர்த்தமானத்தைத் தவிர வேறொன்றும் தெரியவில்லை.

போன வாரம் வைஸ்ராயின் பிரகடனம் அவ்வாரத்தை அலங்கரித்ததுபோல, இவ்வாரத்திற்கு ஸர். எஸ். ஹோரின் பிரசங்கம் ஓர் தனிச்சிறப்பைக் கொடுத்திருக்கிறது. சிறுபான்மைக் கக்ஷிகள், பழைய ராஜப் பிரதிநிதிகள் கொடுத்த பிரதிக்ஞைகள், பிரிட்டிஷ் ராஜ்யத்தின் நன்மைகள் முதலியவற்றைப்பற்றி ஓர் பல்லவி பாடினார். கடைசியில் எது எப்படியிருந்தாலும் மன்னர் பிரானின் ஆட்சி நிற்காமல் நடக்கும் எனவும் கூறிவிட்டு, இந்தியாவின் முகத்தில் ஓர் அறை அறைந்தார்.

ரஷ்யா "பழைய குருடி கதவைத்திறடி" என்ற பழமொழிபோல முன்பிருந்த ஸ்திதிக்கே செல்லப்போவதாகக் கேள்வி. ரஷ்யக் கலகத்தின் இருபத்திரண்டாவது வருஷக் கொண்டாட்டத்தின் பொழுது ராஜரீகத்தில் சில மாறுதல்கள் செய்யப் போவதாகத் தெரிகிறது. பொது உடைமைத் தத்துவத்தைச் சிறிது விலக்கிச் சிலருக்குச் சொந்த வீட்டையும், சொந்த தொழிற்சாலையையும், சொந்த நிலத்தையும் வைத்துக்கொள்ள அனுமதிக்கப் போவதாகக் கேள்வி.

ஜெர்மனியில் குடிகள் கலகஞ்செய்ய ஆரம்பித்திருக்கிறார்களாம். துருப்புகள் குறை கூறுகின்றனவாம். ஜெக் குடிகள் எல்லா உத்தரவுகளையும் மீறிச் சுதந்திர தினத்தைக் கொண்டாடினார்களாம். அங்கே சந்தேகப் பட்டவர்களை கெஸ்

டாபோ போலீஸ் கைதுசெய்து, ஆயிரக் கணக்கானவர்களைக் கொன்றனர்.

ரஷ்யா பிடித்த போலந்து நாட்டிலுள்ள ஜமீன்களெல்லாம் மாறிவிட்டன. அங்கேயுள்ள, 1,790,000 ஏகர் நிலங்கள் 178,000 குடியானவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டன. ஆயிரக் கணக்கான பசுக்களும், குதிரைகளும், ஆடுகளும் அவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டன.

**நம் நாட்டில்:**

மைசூர் திவான், அசம்பிளியில் "மஹாராஜா, கூடிய சீக்கிரத்தில் குடிகளுக்கு ஓர் நல்ல சீர்திருத்தம் கொண்டுவரப் போகிறார். சமஸ்தானத்தின் செழிப்பையும், குடி மக்களின் நன்மையையும் இச் சீர்திருத்தம் கொடுக்குமென்பதில் ஐயமில்லை" யெனக் கூறினர்.

நெல்லூர், தஞ்சாவூர், ராமநாதபுரம், கோயம்புத்தூர், சேலம், கிழக் கோதாவரி முதலிய இடங்களில் காங்கிரஸ் பெரிய வெற்றிகளை அடைந்திருக்கிறது. இது வரையிலும் 309 ஸ்தானங்களில் காங்கிரஸ் 269 ஸ்தானங்களைப் பற்றிக் கொண்டது.

உலகத்தில் மழை பெய்தால் கணக்கு வழக்கில்லாமல் பெய்கிறது. இல்லாவிட்டால் ஒரு பொட்டுக்கூடப் பெய்வது கிடையாது. இதற்கு முன்பு எங்கும் மழையில்லாமல் பஞ்சம் விளைந்தது. ஆந்திரதேசத்தில் பல விடங்களில் மழை பெய்ததினுல் பெரு வெள்ளம் வந்து பல கிராமங்களை அடித்துக்கொண்டு போய் விட்டது.

"யுத்தத்தில் பிரிட்டனுக்கு இந்தியா உதவி செய்யவேண்டுமென்றால், பிரிட்டன் இந்தியாவின் பூரண சுதந்திரத்தை நிலைநிறுத்த வேண்டும். அதல்லாமல் சிறு பான்மையோர் கக்ஷிகளை நாங்கள் பாதுகாக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்வதில் ஒன்றும் பிரயோசனமில்லை. அது சுத்த ஹம்பக்கே. ஹிந்து—முஸ்லீம் கலகங்களெல்லாம் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் விளைவேதவிர வேறொன்று மில்லை. ஆகையால் இச்சமயத்தில் காங்கிரஸால் செய்யக்கூடியது, அரசாங்கத்திலிருந்து விலகவேண்டியதுதான். காங்கிரஸின் மற்ற நடத்தைகளெல்லாம் பிரிட்டனுடைய போக்கிலிருக்கிறது," என்று மகாத்மா உலகத்திற்கோர் செய்தி விடுத்திருக்கிறார்.

பம்பாய் அசம்பிளியில், ஸர். எஸ். ஹோர் விடுத்த செய்தியைப் பற்றிப் பேசும்பொழுது, பல முஸ்லீம் நபர்கள் பிரிட்டனின் செயலைக் கண்டித்தனர். அத்துடன் முஸ்லீம் லீகின் விசித்திரப் போக்கையும் கண்டித்தனர்.

சென்னைக் கூட்டுறவுச் சங்க வெள்ளி விழா, சென்னைக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் கொண்டாடப்பட்டது. அதற்குக் கனம் டி. பிரகாசம் தலைமை வகித்தார். எஸ். வி. ராமமூர்த்தி ஐ. ஸி. எஸ் சொற்பொழிவாற்றினர்.

மறுபடியும் காந்தியையும் காங்கிரஸ் தலைவர் ராஜேந்திரப் பிரஸாதையும், ராஜப் பிரதிநிதி அழைத்திருக்கிறார். நேற்று புதன்கிழமை மூவரும் சந்தித்தனர்.

சென்னை மந்திரிசபையும், ஐக்கிய மாகாண மந்திரி சபையும் ராஜிநாமா செய்து விட்டன. இரு ராஜதானி கவர்னர்களும் அதை ஒப்புக்கொண்டு விட்டனர். சென்னையில் ராஜ்யத்தை நடத்த மூன்று அங்கத்தினர்களை நியமித்திருக்கிறது. மற்ற ராஜதானியிலுள்ள மந்திரி சபைகள் காலா காலத்தில் ராஜிநாமா செய்யும்.

"பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவுக்குச் செய்யவேண்டியதைச் செய்யவில்லை. அது சிறுபான்மைக் கக்ஷிகளுள் ஏற்படும் கஷ்டங்களை மிகப் பெரிதாகக் கற்பனை செய்து கொண்டு, காங்கிரஸ் சொல்வதற்கெல்லாம் குற்றஞ் சொல்லிக்கொண்டு வருகிறது. காங்கிரஸ்தான் இந்தியக் குடிகளின் பிரதிநிதி என்பதை எவராலும் மறுக்க முடியாது. இச் சமயத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் காங்கிரஸுக்கு எதிராக நடக்குமானல், கட்டாயம் அரசாங்கம் பெருஞ் சங்கடத்திற்குள்ளாகும் என்பது என்னுடைய நோக்கம்" என்று ஸர். எஸ். ராதாகிருஷ்ணன் கூறியிருக்கிறார்.

# தீபாவளி

(வரகவி. திரு. அ. சுப்ரமண்ய பாரதி)

இவ்வருஷம் தீபாவளி ஐப்பசி மாதம் 25-ஔ வெள்ளிக்கிழமையன்று (10-11-39) வருகிறது. தீபாவளி, பாரத தேசம் முழுவதும் மிகப் பிரபலமாகக் கொண்டாடப் படும் ஒரு பெரிய பண்டிகை. இந்தப் பண்டிகை வருஷந்தோறும் துலாமாசம் (ஐப்பசி மாதம்) கிருஷ்ண பக்ஷத்தில் நடைபெறுவது. இதில் (1) நரகசதுர்த்தசி ஸ்நானம் (2) தீபாவளிப் பண்டிகை (3) தீபாவளி அமாவாசை (4) கேதார கௌரி விரதம்--ஆகிய நான்கு விசேஷங்களும் சேர்கின்றன. இது கேவலம் லௌகிக சம்பந்தமான பண்டிகையல்ல; சாஸ்திர சம்பந்தமான ஒரு வைதிகப் பண்டிகையேயாம். இது இத்தகைய பண்டிகை யென்பது விசேஷ மாக யாருக்கும் தெரியாது. கிருஷ்ணபகவான் நரகாசுர வதம் செய்து, உலகத்துக்கு க்ஷேமமுண்டாக்கிய தன் ஞாபகார்த்தமாகக் கொண்டாடப்படுவதென்பதே பெரும்பான்மையரின் தீர்மானம். ஆதலின் கவனிப்போம்.

இவ்வருஷம் ஐப்பசி மாதம் 24 ஔ வியாழக்கிழமையன்று நரகசதுர்த்தசி ஸ்நானம் வருகிறது. இந்த ஸ்நானம் சதுர்த்தசியுடன் கூடிய இரவில் சந்த்ரோதய காலத்திற் செய்ய வேண்டியது. தீபாவளிப் பண்டிகை மறுநாள் ஸ்வாதி நக்ஷத்திரத்துடன் கூடிய ஸுப தினத்தில் வருகிறது. தீபாவளிப் பண்டிகைக்கு ஸ்வாதி நக்ஷத்திரம் முக்யமானதாகும். ஸ்வாதி நக்ஷத்திரம் சில சமயம் சதுர்த் தசியன்றே வரும். அப்படி வருமானால் அன்றே தீபாவளிப் பண்டிகை நாளாகும். இவ்வருஷம் போதாயன அமாவாசையும் தீபாவளி நாளன்று வருகிறது. ஐப்பசிமாதம் 26 ஔ சனிக்கிழமை அமாவாசை வருகிறது. இது எல்லோரும் அநுஷ்டிக்கத்தக்க அமாவாசை. இது பிதிர் தேவதைகளின் ஆராதனைக்குரிய தினங்களில் மிகச் சிறந்த தாகும். ஆகையினால் இன்று எல்லோரும் சிரத்தையோடு பிதிர்த் தர்ப்பணம் செய்வது கடமையாகும். அதற்கடுத்த நாள் கேதார கௌரி விரதம் வருகிறது. இது தேவியின் ஆராதனை சம்பந்தமா யேற்பட்ட விரதமாகும். இதனை நம் நாட்டில் ஸ்திரீகள் பக்தி சிரத்தையோடு அநுஷ்டித்து வருகிறார்கள்.

தீபாவளிப் பண்டிகையில் சதுர்த்தசி ஸ்நானமே சிறந்தது. இது நரகவேதனையினின்று தப்புவிக்கும் விசேஷ முடையது. இதனால் இதற்கு நரக சதுர்த்தசி ஸ்நானம் என்ற பெயர் ஏற்பட்டது. இப்படிப்பட்ட மங்களத்தைக் கொடுப்பதால் இதற்கு மங்கள ஸ்நானம் என்கிற பேருமுண்டு. இது சகலபாபங்களையும் போக்க வல்லது. ஆதலால் இதற்குக் கங்கா ஸ்நானம் என்கிற பேருமுண்டு. இது தீபாவளியை அநுசரித்து வருவதால் இதற்குத் தீபாவளி ஸ்நானம் என்கிற பேருமுண்டு.

தீபாவளி என்னும் சொல் தீபாவலி என்னும் வடமொழியின் திரிபு; 'விளக்கு வரிசை' யென்கிற பொருளுடையது. தீபாவளி நாளைவிட கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகைப் பண்டிகை நாளிலேதான் நம் தேசத்தில் கார்த்திகை தீபம் என்கிற விசேஷம் பாராட்டித் தேவாராதனையும் தீபாராதனையும் நடத்துகிறோம்; வீட்டிலெங்கும் வரிசை வரிசையாகத் தீபமேற்றிவைத்து மகிழ்கிறோம்; பட்டாசுகளும் பாணங்களும் கொளுத்தி மகிழ்கிறோம். ஆதலால் இதனையே ஆகம சாஸ்திரம் தீபாவளி என்று கூறுகிறது. கார்த்திகைப் பண்டிகை நாளிலேதான் ஆலயங்களிலும் தீபங்களேற்றி வைத்து ஆராதனையும் விசேஷமாகச் செய்யப்படுகிறது. ஆயினும் தீபாவளிப் பண்டிகை வேடிக்கைப் பண்டிகையாக விளங்குவதால், உலகம் இதனைக் கொண்டாடுவதில் மிகுந்த உற்சாகம் காட்டுகிறது; ஆனால்

இது சாஸ்திரீயமான தென்பது தெரியாது.

ஆவணிமாதம் சுக்லபக்ஷம் ப்ரதமை தினம் சாந்த்ர மானப்படி புரட்டாசி மாதம் பிறக்கிறது. பிதிர்த்தேவர்களுக்கு நம்முடைய ஒரு மாதம் ஒரு நாள். சுக்ல பக்ஷம் பதினைந்து நாளும் பகல். கிருஷ்ண பக்ஷம் பதினைந்து நாளும் இரவு. இஃதே பிதிர்த்தேவர்களுக்கு இரவின் ஆரம்பம். இது தேவர்களுக்கு இரவாகிய தக்ஷிணாயனகாலத்திலுண்டாவது.

தக்ஷிணாயனமாகிய இராக்காலத்தில் சூரியகிரணங்களுக்குப் பலக் குறைவு. சந்திர கிரணங்களுக்குப் பலமதிகம். சூரிய கிரணம் **அர்ச்சராதி மார்க்கம்** அல்லது **ஊர்த்வகதி** எனப்படும். சந்த்ர கிரணம் **அதோகதி** எனப்படும். புரட்டாசி மாதம் தேவர்களுக்கு இரவாகிய தக்ஷிணாயன காலத்தின் மத்தியிலுண்டாவது. அப்போது அதோகதி மார்க்கமே வலுவுடையது.

**ஊர்த்வகதி, அதோகதி, தூமகதி** என்று ஜீவகதிகள் மூவகைப்படும். இவைகளே ஜீவன் உடலைவிட்டு நீங்கியவுடனே அவை போகவேண்டிய இடங்களுக்குச் செல்வதற்குரிய மார்க்கங்கள். **தூமகதி** என்பது புகைமார்க்கம். இது யாகம், அக்னிஹோத்ரங்கள் செய்பவர்களுக் குரிய மார்க்கம். ஏனைய இரண்டில் **ஊர்த்வகதி** புண்யாத்மாக்கள் செல்கிற மார்க்கம். **அதோகதி** பாபிகள் செல்கிறமார்க்கம். ஆதலால் இது நரக கதி யெனப்படும்.

தேவர்களுக்கு இரவாகிய தக்ஷிணாயனமே அதோ மார்க்கம் எனப்படும். இதனாலே தான் தக்ஷிணாயனத்தில் உடலைவிட்டு நீங்கிய ஜீவாத்மாக்கள் நரகத்தையடைகின்றன வென்றும் உத்தராயணத்தில் இறந்த ஜீவாத்மாக்கள் நற்கதியடைகின்றன ரென்றும் ஸ்மிருதியாதி சாஸ்திரங்கள் கூறுகின்றன.

புரட்டாசி மாதம் அமரபக்ஷமே அதோ மார்க்கத்திற் சிறந்தது. அஃதே மஹாளய பக்ஷம் என்பது. இச்சமயம் மேற்குறித்த மூன்று மார்க்கங்களிலும் செல்கிற ஜீவாத்மாக்கள் தத்தமக்குக் குறிப்பிடப்பட்ட இடங்களுக்குப் போகாமல் அந்தரத்தில் அலைந்து கொண்டே யிருக்கும். இதுபற்றியே மஹாளயத்தில் தர்ம ராஜா நரகலோகத்தை வெறுமையாக்கி விடுகிறார்.

இவ்வாறு அலையும் ஆத்மாக்கள் தங்கள் திருப்தியின் பொருட்டுத் தம் தம் இனத்தாரை நாடிவருகின்றன. இக்காலத்தில் பிதிர்க்களை நோக்கிச் செய்யப்படுகிற தான தருமங்களும், தர்ப்பணங்களும் அக்ஷயபலனைத்தரும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

தீபாவளி அமாவாசையும் அதற்கு முதல்நாளாகிய சதுர்த்தசியும் மஹாளய காலத்தின் முடிவாம். இதிற் செய்யப்படுகிற தான தருமங்களும் தர்ப்பணாதிகளும் பிதிர்க்களுக்கு மிகச் சிறந்த திருப்தியை உண்டாக்கத் தக்கவை. நரக சதுர்த்தசியாகிய இந்த நாள் பிதிர்க்களுக்கு உகந்த தினமாகையால் இதில் பிதிர்த்தர்ப்பணம் செய்து ஏழைகளுக்கு உடையும், உண்டியும் உதவிப் பண்டிகை கொண்டாடுவது நம்மவருடைய புராதன வழக்கமாகும். நரக சதுர்த்தசியைப் பற்றித் தெரிந்துகொள்ளவேண்டியது இவ்வளவேயாம். இதனைக் கூர்ந்துணரும் பாக்கியமுடையவர்கள் நம்முடைய பெரியோரின் அற்புதமான புத்தியையெண்ணி வியந்து பாராட்டுவார்களென் பதில் ஐயமில்லை.

# கடலோரக் கிளிஞ்சல்கள்

சார்லஸ்ரூஸ் என்பவனைச் சில முக்கிய ராணுவ இரகசியங்களை ஜெர்மன் உளவாளிக்குச் சொல்லியதாகப் பிரஞ்சு அரசாங்கம் குற்றஞ்சாட்டிக் கொலைத் தண்டனை விதித்தது. லாப்ஸ்டீன் என்னும் மற்றொரு தேசத் துரோகியும் கொலைத் தண்டனை யடைந்தான். மற்றும் மூன்று உளவாளிகள் ஐந்துவருஷக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டனர்.

* * *

தேகநூல் சாஸ்திரத்திற்காக வைக்கப்பட்டிருந்த நோபல் பரிசு இவ்வருஷம் ஓர் ஜெர்மன் சாஸ்திரிக்கு வழங்கப்பட்டது. ஜெர்மன் சாஸ்திரி கெர்ஹார்டு டோர்மார்க் என்பவருக்கு அவர் கண்டுபிடித்த "ப்ரோன் டாஸில்" என்னும் விஷக்கிருமிகளை அழிக்கும் முறையைக் கண்டுபிடித்ததற்காக அவரைக் கௌரவித்துக் கொடுக்கப்பட்டது. சென்ற வருஷம் இதே பரிசு கார்னலி ஹேய்மான்ஸ் என்னும் பெல்ஜிய நாட்டுத் தேகநூல் சாஸ்திரிக்கு வழங்கப்பட்டது.

* * *

ரைன்லாந்தில் ஒரு வீட்டில் மாயக் கதவுகள் இருக்கின்றனவாம். அவ்வீட்டிற்கு வருபவர்கள் நிலைப்படிக்கு வந்ததும், கதவுகள் தானகவே திறந்து கொண்டு, அவர்கள் உள்ளே சென்றதும் அவைகள் தானகவே மூடிக்கொள்ளுமாம். திறக்கும்பொழுதும் மூடும்பொழுதும் கதவுகள் எவ்விதச் சத்தமும் செய்யாதாம். அக் கதவுகளெல்லாம் எவருக்கும் தெரியாத மின்சார விசைகளால் நடத்தப்பட்டு வருகின்றனவாம். மனிதர்கள் கதவினருகில் சென்றதும் மின்சார விசைகள் தடைபட்டுக் கதவுகளைத்திறக்கவும் மூடவும் செய்கின்றனவாம்.

* * *

இதாலியில் மோட்டார் திருடனெருவன், ஒரு சினிமா கொட்டகை வாசலிலிருந்த ஒரு மோட்டாரைத் திருட்டுத்தனமாக ஓட்டிக் கொண்டு சென்றுனும். மோட்டார் வண்டி சிறிதுதூரஞ் சென்றதும் சடாரென நின்று விட்டதுமல்லாமல், மோட்டார் ஹார்ன் பலமாக அலற ஆரம்பித்து விட்டதாம். இதைக் கண்டு நடுங்கிய திருடன் இறங்குவதற்குக் கதவைத்திறக்கப் போகையில் வண்டியின் கதவுகள் பூட்டப்பட்டுக் கிடந்தனவாம்!

* * *

எட்வர்டு பின் டோ என்னும் சோதிட சாஸ்திரி "கிரகங்கள் சமாதானத்தைக் குறித்தாலும், ஹிட்லர் சமாதானத்தை விரும்பான் போலிருக்கிறது" என்றாராம். இதற்கு அவருடைய நண்பரான ஓல்டுமூர் என்னும் மற்றொரு சோதிடப்புலி "என்னைக்கூட ஹிட்லர் ஏமாற்றிவிட்டானய்யா" எனக்கூறிப் பெருமூச்சு விட்டாராம்!

* * *

வின்ஸ்டன் சர்ச்சிலுக்குச் சிவப்பு நாடாவைக் கண்டால் ஆகாதாம். சமீபத்தில் அவர் கப்பற்படைத் தளகர்த்தராக நியமிக்கப்பட்டதும் வொய்ட்ஹாலுக்குப் போக உதவும் ஓர் சிவப்பு நாடா கட்டிய சீட்டைக் கொடுத்தார்களாம். வந்துவிட்டது கோபம் சர்ச்சிலுக்கு. "என்னுடைய யோக்கியதை என் முகத்தில் எழுதி யொட்டியிருக்கிறது" எனக் கூறி அவன் தலையிலேயே அச்சீட்டைக் கிழித்துப் போட்டாராம்!

# மைசூரின் முன்னேற்றம்

தற்காலம் இந்திய சமஸ்தானங்களுள் முதன்மையாக விளங்கி வரும் மைசூரின் முன்னேற்றத்திற்குக் காரண பூதர்களாய் விளங்குபவர்கள் இருவர். முப்பத்தேழு வருஷங்களாய்த் தம் நாடே வீடெனக் கருதி, குடிமக்களே தம் மக்களெனக் கருதி ஆண்டுவரும் மஹாராஜா ஒருவர். ஜாதி மதங்களை அறவே மறந்து, திவானாய் விளங்கி வரும் ஸர் மீர்ஸா இஸ்மாயில் மற்றொருவர்.

தம் நாட்டு மக்களை வாஞ்சையுடனும் பெருமையுடனும் பரிபாலித்து வரும் மஹா ராஜாவின் மகிமையே மகிமை. பெரிய குடும்பத்தில் பிறந்து நாட்டையாளும் ஸ்தானத்திற்கு வந்துவிட்டபோதிலும், தானென்னும் மமதையை அறவே ஒழித்து, குடிகளின் மனப் போக்கைச் சால உணர்ந்து அரசாங்கத்திலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து வரும் மன்னனை யடைந்தது மைசூர் செய்த பாக்கியமே. தூண்களில்லாவிடில் கட்டிடமெங்கே ; தூண்களை யமைக்கும் சிற்பி போல், மைசூரின் முன்னேற்றத்திலேயே கண்ணுங் கருத்துமாயிருக்கும் ஸர் மீர்ஸா இஸ்மாயிலைத் திவான் ஸ்தானத்தில் அமர்த்தியவர் மகாராஜாவென்பதை நாம் ஒருபோதும் மறக்கலாகாது.

அன்பே உருவெடுத்து வந்தாற்போலிருக்கும் ஸர் மீர்ஸா இஸ்மாயிலின் பெயரும் கியாதியும் உலக முழுவதும் தெரிந்த விஷயமே. சாந்தமும் தயையும் குடிகொண்டிருக்கும் அவரிடத்தில் ஜனங்களிடத்திலுள்ள பிரியம் அளவில்லாதது. தனக்கொன்று பிறர்க்கொன்று என்னும் பாகுபாடில்லாமல், சுய லாபத்தில் இச்சையை அறவே ஒழித்துத் திவான் பதவியில் மாணிக்கம் போல விளங்கி வரும் இவரை யார்தான் நேசிக்கமாட்டார்கள் ? இவர் சுற்றுப் பிரயாணஞ் செய்தபொழுது சிறு குழந்தைகளுக்குத் தின்பண்டங்களை மலர்ந்த முகத்துடன் அளிப்பதும், அச்சிறுவர் சிறுமிகள் ஓடிவந்து இவர் சொக்காயைப் பிடித்திழுப்பதும் ஓர் காட்சியே.

“செய்வன திருந்தச் செய்” என்னும் பழமொழியேபோல ஸர் மீர்ஸா இஸ்மாயில், தான் எடுத்த காரியம் யாதாயிருந்தாலும், அதை முடிக்காமலிரார். அவருக்குத் தேசத்தொண்டு செய்வதில் மிக்க ஆர்வம் உண்டு. மைசூர் காங்கிரஸ்காரர்களுக்கு மட்டும் அவரிடத்தில் ஆத்திரமும் கோபமும் இருக்கலாம். ஆனால் காங்கிரஸுக்கு மூலாதாரமான மகாத்மா காந்தியிடம் மைசூர் திவான் கொண்டிருக்கும் நம்பிக்கையும், அன்பையும் சொல்லி முடியாது.

அவர் உலகில் அனுபவிக்க விரும்புவது சிலவே. நாகரிகத்தின் சின்னமெனப்படும் புகை விடுவது அவரிடமில்லை. சிற்றின்ப நுகர்ச்சிக்கு ஹேதுவாக இருக்கும் குடி அவரிடமில்லை. எதற்கும் அஞ்சாத பார்வை ; தனித்த வாழ்க்கையை விரும்பும் மனதுடையவர் ; இந்தியாவின் முதுகெலும் பெனப்படும் உழவனை எளிய வாழ்க்கையில் ஒத்தவர் ; காந்திஜீயின் கொள்கையைப் பரிபூரணமாகப் பின்பற்றுகிறவர். அவர் மகாத்மாவைப்பற்றி என்ன கூறுகின்றார் கேளுங்கள் :— “ மஹாத்மா, சத்தியத்திலும், அதை அனுஷ்டிப்பதிலும் தலை சிறந்தவர், ஒழுக்கங் குன்றாதவர், கர்ம வீரர். அவரை நினைக்கும்பொழுதெல்லாம் நம் மனதில் பழங்காலத்து மதாச்சாரியர்களும், வீரர்களும் தோன்றி மறைகின்றனர் என்பது தெற்றென விளங்கும்.” மீர்ஸா இஸ்மாயிலைப்பற்றி நாம் கூறப்புகின், அவர் காந்தியைப்பற்றிக் கூறிய மொழிகளே அவருக்கும் உரித்தாகும் என்பதே.

# ரஷ்யாவின் முடிசூடா மன்னன்

தன்னுடைய அறையில் சாய்வுநாற்காலியில் சாய்ந்துகொண்டு "குடியானவர்களின் வர்த்தமானப் பத்திரிகை"யை வாசித்துக் கொண்டிருப்பவர்தான் "ரஷ்யாவின் முடிசூடா மன்னனான ஜோஸப் ஸ்டாலின். கருமை மறையும் கேசம்; முறுக்கிவிட்ட மீசை, குழிந்து கிடக்கும் கண்கள், அம்மைத் தழும்புகள் நிறைந்த முகம், ஆடம்பரமில்லாத சாதாரண உடை. யார்? உலகத்தில் ஆறில் ஒரு பாகத்தைத் தன் வலிமையினல் ஆளுபவன். எழுபது பாஷைகள் பேசும் 182 ஜாதிகளடங்கிய 80,000,000 ஜனங்களை அடக்கி ஆளுபவன் முகத்தில் தவழும் கவலையில்லாப் புன்சிரிப்பைக் கண்டதும் எல்லோரும் பிரமித்துப் போவார்கள்.

காகஸஸ் பிரதேசத்தில் பிறந்தவன், ரஷ்ய பாஷையை அறியாதவன், இப்பொழுதும் ரஷ்ய பாஷையை எழுதும்பொழுது பிற பாஷையை எழுதும்போதுள்ள கூச்சத்தைக் கொண்டவன். அவனுடைய தொண்டு கிழமான தாய், மகனின் அபார வெற்றியைப் பார்க்க மாஸ்கோவுக்கு வந்தபொழுது மொழிபெயர்ப்போன் ஒருவனை அமர்த்திக் கொண்டாளாம்!

வண்ணாத்தியின் மகன்! சேணியனின் குடிசையில் வளர்ந்தவன்! இன்றோ ஒரு பெரிய நாட்டிற்குத் தலைவன். கிட்டத்தட்ட ஸ்டாலினுடைய அதிகாரம் ஓர் சர்வாதிகாரியின் அதிகாரத்தை ஒத்ததேயாகும். அவன் அதிகாரத்தை நடத்த பல சூரப் புலிகள் ரஷ்யாவில் இருக்கின்றனர். சிறந்த வீரனான வோரஷிலாவும்; பிரதம மந்திரியும், ஸ்டாலினுக்கு அடுத்தபடியாயுமுள்ள மாலடோவும்; "விவசாயிகளின் சிறிய தந்தை" என்று கொண்டாடி, குழந்தைகள் படத்துக்காக எழுதிக் கேட்கும்படியாகவும், பயிர்களைப்பற்றி புத்திமதி கேட்கும்படியாகவும் இருந்த ஒரே பசு இறந்தால் என்னசெய்வது என்று பலகேள்விகளைக் கேட்கும்படியாகவும் உள்ள காலினினும் ஸ்டாலினுடைய உயிருக்குமினியநண்பர்கள்.

இப்பேர்ப்பட்ட மனிதனை 1906-ம் ஆண்டு ஜார் சக்கரவர்த்தியின் இரகசியப் போலீசார் வேட்டையாடினர் களென்றால் ஆச்சரியப்பட வேண்டியிருக்கிறது. அக் காலத்தில் கூட ஸ்டாலின் சில துப்பாக்கி வீரர்களுக்குத் தலைவனாக இருந்தான். டிப்லிஸ் நகர பாங்கிலிருந்து தங்கக் கட்டிகளை மாஸ்கோவுக்கு எடுத்துச் செல்லுகையில், கொள்ளையடித்ததற்காகக் கைது செய்யப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டான். ஆனல் எப்படியோ சிறையிலிருந்தும் தப்பியோடி 1913ம் ஆண்டு "போல்ஷிவிஸ்" என்னும் ஓர் சிறு கூட்டத்திற்குத் தலைமைவகித்துக் கலகஞ் செய்து மறுபடியும் சிறைப்பட்டு நாடு கடத்தப்பட்டான்.

ஜார் சக்கரவர்த்தியின் அழிவிற்குப் பிறகு, 1917ல் கலகமே உருவெடுத்த ஓர் சிறு கூட்டத்தின் தலைவனாக பெட்ரோ கிராட் நகரத்திற்குள் நுழைந்தான். அச் சமயத்தில்தான் போல்ஷிவிஸத் தலைவனான லெனின், டிராட்ஸ்கியுடன் சேர்ந்து "மெதில்ட் ஷிவின்கா" என்னும் நாடக சாலையைப் பீரங்கிகளால் அலங்கரித்து, அங்கே கூட்டம் கூட்டினன். அன்றிலிருந்து உழைக்க ஆரம்பித்தவன் 1922ல் சோவியத் உலகிற்கே யொதுக்காரியதரிசியானன். ஸ்டாலின் அதிகாரமமதையில்திளைத்து இருக்கையில் அவனை விட புத்தியில் சிறந்தவனான டிராட்ஸ்கி எங்கும் வேட்டையாடப்பட்டு, நிற்க இடமின்றிக் கஷ்டப்படுவானேன்? ஏனென்றல் அந்த யூதப் பிரசங்கி போல்ஷிவிஸத்தை ஓர் பிடிப்பாக வைத்துக்கொண்டு அதிகாரத்தைத் தன் வசப்படுத்த எண்ணியவன். ஆனல், ஸ்டாலினே காரியக்காரன், குடிகளின் நன்மையைக் கோரியவன்; பதிலாக அவர்கள் அன்பைப் பெற்றவன்.

ஸ்டாலினுடைய குடும்ப விஷயம் பலருக்கு ஏமாற்றத்தைக் கொடுக்கும். ஸ்டாலின் மாரடைப்பினலும், ராஜ பிளவையினலும், மற்றும் அவனுடைய உயிரை நடுவில் கத்தரிக்கக் கூடிய பல இடையூறுகளையும் அனுபவித்திருக்கிறன். அவன் இரு மனைவிகளை விவாகஞ் செய்து கொண்டவன். அவனுடைய இளைய மனைவி இறந்ததைப்பற்றி ஊரில் அநேகர் பலவிதமாக வம்பளந்து வந்தனர். நாணமும், பேதைமைக் குணமும் உடைய அவனுடைய இளைய மனைவி படுக்கையில் இறந்து கிடந்தாள். அப்பொழுது அவனுடைய முகம் அவள் இறந்ததைப்பற்றி எவ்விதத் துக்கக்குறிகளையும் காட்டவில்லை. தகப்பனுடன் நெருங்கிய பழக்கம் வைத்துக்கொள்ளாத ஸ்டாலின் மூத்த மனைவியின், மூத்த குமாரன் ஓர்

(190-ம் பக்கம் பார்க்க)

# நமது ஸங்கீதம்

(ஏ. என். கல்யாணஸுந்தரம் எம். ஏ.)

(சென்றவாரத் தொடர்ச்சி)

மனுஷ்ய சாரீரத்தின் மூலமாக உண்டாகும் நாதாத்மகமான ஸங்கீதத்தைப்பற்றி இதுவரை எழுதியாகிவிட்டது. இனிமேல் வாக்யங்கள் மூலமாக உண்டாகும் ஸங்கீதத்தைப்பற்றி எழுதுகிறேன்.

வாக்யங்கள் பக்க மேளமாகவும், தனியாகவும், வாத்ய கோஷ்டியாகவும் (ஆர்கெஸ்ட்ரா) உபயோகிக்கப்படுகின்றன.

வாய்ப் பாட்டிற்குப் பக்கமேளமாகப் பிடில், ம்ருதங்கம், கடம், கிஞ்சிரா, மோர்சிங் இவைகள் வாசிக்கப்படுகின்றன. இவையன்றி கொன்னக்கோல் என்ற சாரீர பக்க வாத்யமொன்று கிளம்பியிருக்கிறது. இது பொது ஜனத்தையோ, ஸங்கித சாஸ்திரிகளையோ திருப்தி செய்ததாக இதுவரையில் தெரியவில்லை. ஆனால் சில பாடகர்களின் இஷ்டத்தின்மேல் இது பக்க வாத்யமாகவும் வாசிக்கப்படுவதாகத் தெரிகிறது. இந்தப் பக்கவாத்யம் இல்லாமல் இருப்பதே உத்தமம். இது ஸங்கீதத்தின் இனிமையை அடியுடன் கெடுத்துவிடுகிறது.

பக்க வாத்யங்கள் வாய்ப் பாட்டிற்கு அனுகூலமாக இருக்கவேண்டும். பாடகரின் பாட்டிற்கு ஒத்தாற்போல் வாசித்துப் பாடகரின் பாட்டை உயர்வுபடுத்தலே பக்க வாத்யக்காரர்களின் கடமை. சில சமயங்களில் அவர்கள் பாடகர்களுடன் போட்டி போட்டுக்கொண்டு யுத்தத்திற்குக் கிளம்பிவிடுகிறார்கள். இம்மாதிரி செய்வதில் இவர்கள் மதிப்பும் குறைந்து, பாடகரின் மதிப்பும் குறைகிறது. பொது ஜன மதிப்பைப் பெறுவதற்குப் பாடகருக்குப் பக்க பலமாய் இருக்கும் வாத்யங்களே உண்மையில் பக்க வாத்யங்கள்.

ஹிந்துஸ்தான் பாடகர்கள் தபலாவைத் தவிர வேறு பக்க மேளங்கள் இல்லாமல் பாடுவதற்கு இதுதான் காரணம். சிற்சில பெண் பாடகிகள்தான் ஸாரங்கியைப் பக்க வாத்யமாக வைத்துக்கொண்டு பாடுகிறார்கள். இதுபோலவே, தம்புரா ஸ்ருதியுடன் ம்ருதங்கத்தை மாத்திரம் பக்க வாத்யமாக வைத்துக்கொண்டு நமது வித்வான்கள் ஏன் பாடக்கூடாது?

டாக்கிப் பாட்டுகளில் ஜனங்களுக்குப் பிரமை ஏற்பட்டதின் காரணம், அநேக வாத்யங்கள், பக்க வாத்யமாக, பாடுபவரை அநுசரித்து வாசிக்கப்படுவதுதான். இதே முறையை நம் கச்சேரிகளிலும், ஏன் கையாளக்கூடாது?' இதைக் கேட்டதுமே ஸங்கித சாஸ்திரிகள் 'மனோபாவக் கொலை' என்று குதிக்க ஆரம்பித்துவிடுவார்கள். ஆனால் ராகங்களில்தான் பாடகர் மனோபாவத்துடன் பாடுகிறார். கீர்த்தனங்களில் ஸங்கதிகளெல்லாம் அனேகமாகச் சிட்டைசெய்தேபாடப்படுகின்றன. அவைகளில் வித்யாஸம் ஏதாவது இருந்தால், அது ஸங்கதிகளின் வரிசைக் கிரமத்திலோ, அல்லது ஒன்றிரண்டு ஸங்கதிகளை விடுவதிலோதான் இருக்கும், என்பது நமக்குத் தெரிந்த விஷயம். அப்படியிருக்கும்போது பாட்டுகளைச் சிட்டைப்படுத்தி அநேக வாத்யங்களைப் பக்கமேளமாகக் கொண்டு பாடகர்கள் ஏன் கச்சேரி செய்யக்கூடாது? மேல்நாட்டில் இம்முறை பூர்ண வெற்றியுடன் அனுசரிக்கப்படுகிறது. அதை நாமும் என் அனுசரிக்கக்கூடாது?

புல்லாங்குழல், பிடில், கோட்டு, ஜலதரங்கம், வீணை இவைகள் தனிவாத்யக் கச்சேரியாக வாசிக்கப்படுகின்றன. இந்தக் கூட்டத்தில் நாதஸ்வரமும் இப்பொழுது சில வருஷங்களாகச் சேர்ந்துவிட்டது. புல்லாங்குழல், நாதஸ்வரம் இவ்விரண்டையும் தவிர, மற்ற வாத்யங்கள், சப்

த்தை அதிகமாக்கி ஒலி பரப்பும் கருவிகளின் உதவியில்லாமல், பெரிய கொட்டகை முதலிய இடங்களில் எல்லோருக்கும் கேட்கும்படியான நாதம் உள்ளவைகள் அல்ல. இருந்தாலும் ஒலிபரப்பும் கருவியின் உதவியால் இவைகளை நாம் இப்பொழுது நன்ருய்க் கேட்கமுடிகிறது. ஆனல் பிடில் முதலிய வாத்யங்களை ஒன்றிற்குப் பதிலாக இரண்டு மூன்றுக்குக் குறையாமல் சேர்ந்து வாசித்தால் இப்பொழுதைக் காட்டிலும் இனிமையாக இருக்கும் என்பது என் நிச்சயமான அபிப்பிராயம்.

சில ஆர்கெஸ்ட்ரா (வாத்யகோஷ்டி)கள் இப்பொழுது கிளம்பியிருக்கின்றன. அவைகள் பேருக்கு மாத்திரம் வாத்ய கோஷ்டிகளே அன்றி உண்மையில் வாத்ய கோஷ்டிகள் அல்ல. அர்த்தமில்லாமல் வாத்யங்கள் சேர்க்கப்பட்டு வாசிக்கப்படுகின்றன. வாத்ய ஒலியின் மதிப்புக்குத் தக்கபடியும், இனிமைக்குத் தக்கபடியும் அவைகள் பிரிக்கப்பட்டு, இவ்விதப் பிரிவுடன் மற்ற வாத்யங்கள் கலக்கப்பட்டு வாசிக்கப்படவில்லை. கோஷ்டியாகச் சேர்ந்து வாசிக்கப்படுவதையே வாத்ய கோஷ்டியாக எண்ணி அவைகள் நடத்தப்படுகின்றன. ஆனல் உண்மையான வாத்ய கோஷ்டிகள், சரியான முறையில் வாசிப்பதைக் கேட்கவேண்டுமானல், வட இந்தியாவிலுள்ள சில பிலிம் கம்பெனிகளில்தான் கேட்க முடியும்.

சினிமா ஸங்கீதத்தில் பொது ஜனங்களுக்கு இப்போது ப்ரமை ஏற்பட்டிருக்கிறது. அதுவும் ஹிந்துஸ்தான் கலப்பு அல்லது ஹிந்துஸ்தான் வர்ணமெட்டில் உள்ளபாட்டுக்கள்,இவைகளில்தான் ஜனங்களுக்கு மயக்கம். நமது கச்சேரிகளிலுள்ள குறைகளைக் கவனித்துப் பொது ஜன நோக்கத்தின்படி நமது பாடகர்கள் பாடாததினல்தான் இச்சினிமா ஸங்கீதத்தில் பொது ஜனங்களுக்கு மயக்கம் உண்டாயிற்று. இந்த விஷயத்தைக் கவனித்தால், பாடகர்கள் மறுபடியும் பொது ஜனத்தைக் கச்சேரிகளில் மயங்கச் செய்யலாம்.

நமது தமிழ் டாக்கிகளில் பாடப்படும் பாட்டுகளில் பெரும்பாலானவை ஹிந்திப் பாட்டுகளின் காப்பிகளே. பொதுஜனம் எதிர்பார்ப்பதுபோல் இவைகள் இருக்கின்றன. இதைக் கண்டு சில விமர்சனக்காரர்கள் ஆத்திரங்கொண்டு 'ஏன் இந்த ஹிந்துஸ்தானி மோஹம்?' என்கிருர்கள். தியாகராஜ கீர்த்தனைகளின் மெட்டில் பாட்டமைத்தாலோ உடனே அவர்கள் "அடாடா என்ன பாபம், ஸ்வாமிகள் பாட்டின் மெட்டிலா காதல் பாட்டுகளும் ஹாஸ்யப்பாட்டுகளும் அமைப்பது?" என்கிருர்கள். சொந்தமாகப் புது மாதிரியில் பாட்டமைத்தாலோ "சிவ சிவா இதையும் பாட்டென்று பாடிவிட்டார்களே," என்கிருர்கள். பிறகு என்னதான் செய்வது? விமர்சனக்காரர்களுக்கே என்ன செய்வதென்று புரியவில்லை. அவர்களைத் திருப்தி செய்வது முடியாத காரியம் என்று சினிமாக்காரர்கள் அறிந்து, வழக்கம்போல் பொது ஜனத்தைத் திருப்திசெய்யும் முறையைத் திரும்பக் கைக்கொண்டு விட்டார்கள். இதுதான் விமர்சனக்காரர்கள் ஸங்கீதத்திற்குச் செய்த உதவி. இதிலும் ஒரு வேடிக்கை. ஒரு பிரபலமான பாட்டு இயற்றுபவர்—பக்தி பூர்வமான அநேக பாட்டுக்கள் இயற்றிப் பெயர் வாங்கியவர்—ஒரு டாக்கிக்காக பக்தி ரஸமுள்ள பாட்டுக்கள் இயற்றிக் கொடுத்தார். அந்தப் பாட்டுக்கள் அவர் இயற்றிய மற்ற பாட்டுக்களைவிட ஒருவிதத்திலும் குறைவாக இல்லை. ஆனல் அப்பாட்டுக்கள் ஒரு ஸமயம் கச்சேரியில் பாடப்பட்டபொழுது ஒருஸங்கீதசாஸ்திரி அந்தப் பாட்டுக்களை, டாக்கிப் பாட்டுக்களென அவமதித்துக் கண்டித்து விமர்சனம் எழுதினர். அந்தப் பாட்டுக்கள் அர்த்த புஷ்டி, ஸாஹித்ய மேன்மை, ஸுலபமான நடை இவைகளில் தியாகராஜர் முதலியவர்களின் கீர்த்தனைகளுக்கு ஸரிஸமானமாக இருந்தன. இருந்தாலும் ஸங்கீத சாஸ்திரிக்கு அவைகளைப் பாட்டுக்களென ஒப்புக் கொள்ள மனம் வரவில்லை. அந்தப் பாட்டுக்களை அவமதித்து, பாட்டு இயற்றியவரையும்அதன் மூலமாக அவமதித்தார். இதுவே ஸங்

கீத சாஸ்திரியார் ஸங்கீதத்திற்குச் செய்த உதவி. இம்மாதிரி விபரீத புத்தியுடன் இருக்கும் ஸங்கீத சாஸ்திரிகள் இருக்கும் வரை ஸங்கீதம் முன்னேறுவது துர்லபம். சினிமாப் பாட்டாயிருந்தால் என்ன, கச்சேரிப் பாட்டாயிருந்தால் என்ன? ஸாஹித்யம் நன்ருயிருந்து, அமைப்பும் நன்ருயிருந்தால், அதில் என்ன குறை ? இவ்வித தாராள நோக்கமும் புத்தியும் ஸங்கீத சாஸ்திரிகளுக்கு ஏற்படவேண்டும். அப்படி ஏற்பட்டால்தான் நமது ஸங்கீதம் முன்னேறும்.

ஸங்கீதத்தின் அரசாட்சிக்குள் ரேடியோ என்ற ஒரு சிறு ராஜ்யமும் இப்பொழுது புதிதாகச் சேர்ந்திருக்கிறது. இச்சிறு ராஜ்யமானது இதுவரை ஒழுங்காகப் பரிபாலிக்கப்படவில்லை. விபரீத முறைகளும், சட்ட திட்டங்களும் கையாளப்பட்டு அரசாட்சி செய்யப்படுகிறது. சீக்கிரம் சீர்திருத்தம் செய்யப்படாவிட்டால், இந்த ராஜ்யத்தில் புரட்சியும், கலகமும் ஏற்படுவது நிச்சயம்.

தென்னிந்தியாவிலுள்ள ஆகாய வசனி நிலையங்களிலுள்ள குறைகளை முதலில் எழுதுகிறேன். பிறகு வட இந்தியாவைப்பற்றி எழுதுகிறேன்.

திருச்சி, சென்னை இவ்விரண்டு நிலையங்களிலும் அடிக்கடி பெரிய வித்வான்கள் பாடுகிருர்கள். ஆனல் அவர்களே இவ்விரண்டு நிலையங்களிலும் அடிக்கடி பாடுகிருர்கள். திருச்சியில் பாடிய மறுவாரம் சென்னையிலும், சென்னையில் பாடிய மறுவாரம் திருச்சியிலும் பாடுவது வழக்கமாகிவிட்டது. இது தவிர, பாடினவர்களையே அடிக்கடி, திரும்பத் திரும்ப, பாடச் சொல்வது சாதாரணமாகிவிட்டது. புதிய பாடகர்களைத் தேர்ந்தெடுப்பதில் அதிகாரிகள் சிரமம் எடுத்துக்கொள்வதில்லை. சென்னையிலுள்ள வாத்ய கோஷ்டியின் வாசிப்பு நன்ருக இல்லை. பெரிய வித்வான்களுக்கு இவர்களே பக்கமேளமாக இருந்து தாறுமாறுமாக வாசித்து, வித்வானின் ஸங்கீதத்தைக் கெடுத்துவிடுகிருர்கள். ஆனல் திருச்சியில் இவ்விதம் இல்லை. பெரிய வித்வான்களுடன் நல்ல பக்க மேளங்கள் சேர்க்கப்பட்டு நல்ல ஸங்கீதம் பாடப்படுகிறது. சென்னைக்கும் திருச்சிக்கும் ஏன் இந்த வித்தியாஸம் ?

இம்மாதிரியான கச்சேரிகளுக்கிடையே க்ராமபோன் ஸங்கீதம் நடைபெறுகிறது. இந்த நிகழ்ச்சிகளுக்கு வேண்டிய பாட்டுகளைப் பொறுக்கும் வேலை யாரிடம் இருக்கிறதென்று தெரியவில்லை. அவர் யாராக இருந்தாலும் அவர் கெட்டிக்காரத்தனத்திற்கு என்ன பரிசு அளிப்பது என்று தெரியவில்லை. ஸ்ரீமான்.........அவர்கள் பாடிய......என்ற பாட்டு என்று சொல்லி 1930ம்வருஷத்தில் ரிகார்ட் செய்யப்பட்ட பாட்டு ஒன்றைப் பாடவைத்து விடுவார். 'சிவசிவா இந்தப் பாட்டைக் கேட்டுதான் அலுத்துவிட்டதே' என்று மற்ற நிலையத்தைத் திருப்பினுல் அதே பாட்டு அந்த நிலையத்திலிருந்தும் கேட்கும். இல்லாவிட்டால் அதைவிடப் பழைய பாட்டு ஒன்று கேட்கும். இந்தமாதிரி ஏற்பாடு செய்வதின் அர்த்தமென்ன ? மாதா மாதம் வெளியிடப்படும் புதிய ரிகார்டுகள் இவர்களுக்குக் கிடைக்கவில்லையா ? திரும்பத் திரும்ப அதே பாட்டுகளைப் பாடவைப்பதின் அர்த்தமென்ன ?

மாதச் சம்பளம் கொடுத்து வாத்ய கோஷ்டியையும், சில பாடகர்களையும் ஏற்பாடு செய்திருப்பதாய்த் தெரிகிறது. காலையில் க்ராமபோன் ஸங்கீதத்திற்குப் பதிலாகவோ அல்லது அதன் கூடவோ இவர்களையும் ஏன் உபயோகப்படுத்திக் கொள்ளக்கூடாது ?' வாத்ய கோஷ்டிக்குத் தக்கபடி ஸங்கீதம் எழுதி, அவர்களுக்கு நல்ல பயிற்சி அளித்து அவர்களை ஏன் வாசிக்கச் சொல்லக்கூடாது ?

வட இந்தியாவில் நிலயத்திலிருந்து காலையில் வாசிக்கப்படும் வாத்ய கோஷ்டியைக் கேட்டவர்கள் யாவரும் நான் எழுதியதின் உண்மையை அறிவார்கள். சென்னை நிலயக்காரர் அதைக் கேட்டதில்லை போலிருக்கிறது. கேட்டிருந்தாலும் அதைக் கவனிக்காமல் அசிரத்தையாய் இருந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் நம் நிலயத்திலிருந்து இந்த மாதிரி ஸங்கீதம் வெளிப்படாதல்லவா ?

காலை நேரத்திற்கு ஏற்ற புதுமாதிரியான ஸங்கீதம், அல்லது பழைய ஸங்கீதத்தை மாற்றிப் புதுமாதிரியாக வாசித்து ஜனங்களுக்கு குதூகலம் கொடுப்பதையே முக்ய நோக்கமாக வட இந்திய நிலையங்கள் கொண்டிருக்கின்றன. வாத்ய கோஷ்டிக்கு நல்ல பயிற்சி அளித்து வாசிக்கச் செய்கிறார்கள். இதை நம் நிலயத்தார்கள் ஏன் பின்பற்றக்கூடாது?

இப்பொழுது ரேடியோ இருக்கும் நிலைமையில், க்ராமபோன் ஸங்கீதமும் சில வருஷங்களுக்கு முன்பு இருந்தது. இப்பொழுது இரண்டு மூன்று வருஷங்களாக அது மிகவும் முன்னேறியிருக்கிறது. இதற்கு முக்கிய காரணம், சினிமா ஸங்கீதமே. சினிமாவிற்கெனச் செய்திருக்கும் சீர்திருத்தங்களை இவர்களும் கைப்பற்றி க்ராமபோன் ஸங்கீதத்தில் புதுமுறையைக் கையாண்டிருக்கின்றனர். இன்னும் கொஞ்சம்சிரத்தையுடன் வேலை செய்தால் பூர்ணவெற்றி அடைவார்கள். மேல் நாட்டு ஸங்கீதத்திலுள்ள நல்ல விஷயங்களைப் பின்பற்றி வாத்ய கோஷ்டியை அமைக்கவேண்டும். நம் வாத்யங்களுடன் மேல்நாட்டு வாத்யங்களையும் சேர்க்க வேண்டும்.

ஸங்கீதத்தைப்பற்றி இவ்வளவு எழுதிவிட்டு, கடைசியாக நம் பஜனைக் கோஷ்டியையும், கோலாட்டம், கும்மி முதலியவைகளைப்பற்றியும் என்னால் எழுதாமல் இருக்க முடியவில்லை. இவைகளில் பாடப்படும் ஸங்கீதம் சாதாரணமானது. பாடுபவர்களும் ஸாதாரணமானவர்கள் தான். வித்வான்கள் அல்ல. ஒன்றும் தெரியாத குழந்தைகளும் கலந்து பாடும் ஸங்கீதம். ஸாஹித்யத்திலுள்ள நல்ல குணம் கடவுளின் நாம ஸங்கீர்த்தனந் தான். பக்கமேளங்கள் ஜாலர்களின் சப்தமும், ம்ருதங்கமும் தான். இல்லாவிட்டால் குழந்தைகள் கைதட்டும் ஓசை தான். இப்படியிருந்தும், மார்கழி மாதத்தில் காலைநேரத்தில் கேட்கும் பஜனைக் கோஷ்டியின் ஸங்கீதம் மனதிற்கு ஆறுதலையளித்து சாந்தியையும் ஸந்தோஷத்தையும் உண்டாக்கவில்லை என்று கூறுபவர் ஒருவருமே இல்லை. இதுபோலவே குழந்தைகள், மழலைச் சொற்களுடன் பாடும் கோலாட்டம், கும்மி முதலியவற்றைக் கேட்டுக் குதூகலமும், ஸந்தோஷமும் அடையாத மனிதனே கிடையாது. இதற்குக் காரணமென்ன? ஸங்கீத சாஸ்திரத்தின் நுட்பங்களையும், ஆராய்ச்சிக்குரிய சிக்கலான விஷயங்களையும், 22 ச்ருதி மேளகர்த்தா, ஆரோஹண அவரோஹண க்ரமம் முதலியவற்றால் உண்டான சண்டைகளையும் வீண் விவாதங்களையும் மறந்து, அடியுடன் தூரத்தள்ளிவிட்டு, சாதாரண முறையில் ஸுலபமான நடையில், எல்லோர்க்கும் அர்த்தமாகும் படி, ஸர்வஜன மனோரஞ்சிதமாகப் பாடப்படும் நாதாத்மகமான ஸங்கீதமே.

---

(186-ம் பக்கத் தொடர்ச்சி)

தொழிற் சாலையில் ஒரு உத்தியோகத்தில் இருக்கிறான். பதினேழு வயது நிரம்பிய இரண்டாவது குமாரன் கம்யூனிஸ்டு வாலிபர்களுக்குத் தலைவனாக இருக்கிறான், அவனுடைய இளஞ் சகோதரியோ சங்கீதத்தில் அபாரமாகத் தேர்ச்சி பெற்றவள். ஸ்டாலினுக்கு அவளிடத்தில் அபார பிரேமை யுண்டு. மனங்கலங்கிநிற்குங் காலத்தில் அவளை, பாரதி போன்ற ரஷ்ய தேசியக் கவியான புஷ்கின் என்பவரின் உள்ளமுருகும் பாட்டைப் பாடச் சொல்லிக் கேட்டு ஆநந்தமடைவான்.

ஸ்டாலின், குடிகளிடத்து உண்மையான மதிப்புடையவன். ஒரு சமயத்தில் அவன் கோர்க்கி சோலையில் சாதாரண மனிதர்களுடன் கலந்து உரையாடி, அவர்கள் குழந்தைகளிடம் விளையாடிக் கொஞ்சிக் குலாவுவதை ஒரு ஆங்கிலேயர் பார்த்து எழுதியிருக்கிறார்.

ஸ்டாலின் ரஷ்யாவின்மேல் கொண்டுள்ள அபிமானத்தை அவனுடைய வார்த்தைகளினாலேயே விளக்குவதுமேலல்லவா? க்ரமிலினில் கூட்டம் கூடியபொழுது "நம்முடைய உருளைக் கிழங்குத் தோட்டத்தின் வேலியை அழித்து யாராவது அக்கிரமமாக நுழைந்தால் கட்டாயம் அவர்கள் நையப்புடைக்கப்படுவார்கள்" என்றான்.

(விண்ஸர் பத்திரிகை)

---

# கதிரியக்கம்

## (Radioactivity)

(ஆர். கே. விசுவநாதன், எம், ஏ. அண்ணுமலைச் சர்வ கலாசாலை)

சென்ற நூற்ருண்டு இறுதியிலும் இந்நூற்ருண்டு ஆரம்பத்திலும் பௌதிக வியலில் அநேக நூதனங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. பௌதிக வியலில் அடிப் படையாயுள்ள பொருள், ஆற்றல் இவை களைப் பற்றிய அறிவு அதன் பொருட்டு வெகுவாக விரிவு அடைந்தது. முக்கிய மாக 1895-ஆம் ஆண்டில் 'ராண்ட்ஜன்' கண்டு பிடித்த எக்ஸ்—கிரணங்களையும், 1896-ஆம் ஆண்டில் 'ஹென்ரி பெக்கு வரல்' கண்டு பிடித்த கதிரியக்கத்தையும், 1897-ஆம் ஆண்டில் 'ஜே. ஜே. தாம்ஸன், கண்டு பிடித்த மின்னுருக்களையும் (Electrons) கூறவேண்டும். இத்துடன் 1900-ஆம் ஆண்டில் 'மாக்ஸ் பிளாங்கு' வெளியிட்ட ஆற்றலின் பிந்து வாதத்தை யும் குறிப்பிட வேண்டும். பொருளுக்கும் மின்சாரத்திற்கும் உண்டான தொடர்பை நன்குணர்வதற்கு மேற்சொன்னவைகள் பெரிதும் பயன்பட்டன. பதார்த்தங்க ளெல்லாம் அணுக்களாலானவை என்றும், ஒவ்வொரு அணுவிலும் மிகை மின் சுமையை ஏற்றுள்ளதொரு கருவும் (Nucleus) அதைச் சூழ்ந்து பல மண்டி லங்களிலே ஓடி வரும் குறைமின் சுமை கொண்ட மின்னுருக்களும் இருக்கின்றன வென்றும் அறியப்பட்டது. அணுக் கருவின் அமைப்பைப் பற்றிய நமது அறி வெல்லாம் பெரிதும் நாம் கதிரியக்கத்தின் மூலமாகப் பெற்றதேயாகும். ஆகையி ஞல் கதிரியக்கத்தின் முக்கியத் தன் மையை உணரலாம்.

'ராண்ட்ஜன்' கண்டுபிடித்த எக்ஸ்—கிரணங்களைப் போலப் பதார்த்தங்களில் ஊடுருவிச் செல்லக்கூடிய வேறு கிரணங் கள் ஏதேனும் இருக்கின்றனவா என்று விஞ்ஞானிகள் ஆராயத் தொடங்கினர் கள். 'ஹென்ரி பெக்குவரல்' என்ற பிரஞ்சு அறிஞர் யுரேனியம் (uranium) என்னும் தாதுவை சிறிதுநேரம் வெயி லில் வைத்துவிட்டு அதை ஒரு கருப்புக் காகிதத்தில் மடித்து ஒரு போட்டோ தட்டின்மீது வைத்துப் பரீக்ஷை செய்து பார்த்தபோது அத் தட்டுப் பாதிக்கப்பட் டதைக்கண்டார். இது வெயிலின் விசேஷ குணமாகஇருக்குமோ என்று முதலில் கரு தினர். ஒரு நாள் அத்தாதுவை வெயிலில் காட்டாமல் போட்டோ தட்டில் முன் போல வைத்துப் பார்த்தார். அப்பொ ழுதும் தட்டு பாதிக்கப்படுவதைக் கண் டார். மேலும் கருப்புக் காகிதத்திற்குப் பதிலாக மெல்லிய உலோகத் தகடுகளை இட, போட்டோ தட்டு அப்பொழுதும் பாதிக்கப்படுவதைக் கண்டார். இதிலி ருந்து யுரேனியம் தாதுவிலிருந்து எக்ஸ்-கிரணங்களைப்போல ஊடுருவிச் செல்லக் கூடிய சில கிரணங்கள் வெளிப்படுகின் றன என்று அறிந்து காட்டினர். இந் நிகழ்ச்சிக்குக் கதிரியக்கம் என்ற பெயர் கொடுக்கப்பட்டது. சில நாட்கள் கழித்து ஸ்ரீமதி 'க்யூரி' என்னும் போலண்டு தேசத்து அம்மையார், தோரியம் (Thorium) என்னும் தாதுவும், அது கலந்துள்ள கலப்புப் பொருள்களும் இவ் வாறே சில கிரணங்களை வெளியிடுவதை தக் கண்டார். யுரேனியம் வடித்தெடுக்கப் படும் ஒரு வகைக் கனிப்பொருள் யுரேனி யத்தை விட அதிகக் கதிரியக்கமுடைய தெனக் க்யூரி அம்மையார் கண்டார். எனவே அக்கனிப்பொருளில் பல டன் களை எடுத்து அதிலிருந்து மிகவும் சிரமப் பட்டுச் சில மில்லி கிராம் கொண்ட ஒரு புதுத் தாதுவைக் கண்டுபிடித்தார். யுரேனி யம், தோரியம் தாதுக்களைப்போல இப் புதுத்தாது பல்லாயிரம் மடங்கு கதிரியக் கம் கொண்டதாய் இருந்தது. எனவே இது கதிரியம் (Radium) எனப் பெய ரிடப்பட்டது.

இக் கிரணங்களைப் பரிசோதித்து அவைகளின் இயல்புகளைக் கண்டறிந்தவர்

கள் "ரூதர்போர்டு" "ஸாடி" என்னும் விஞ்ஞானிகள். ஆற்றலின் அழிவின்மை விதிக்கு மாறுக, இத் தாதுக்கள் மிகுந்த ஆற்றல்கொண்ட கிரணங்களை ஓயாமல் வெளியிடுவதற்குக் காரணம் 'ரூதர்போர்டு' கூறினர். இப்பெரியார்தான் இரண்டு வருஷங்களுக்கு முன் கல்கத்தாவில் நடந்த இந்திய பௌதிக காங்கிரஸின் வெள்ளி விழாக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்க இருந்தவர். ஆனல் துரதிர்ஷ்ட வசத்தால் கூட்டத்திற்குச் சில நாட்களுக்கு முன் உயிர் துறந்ததினல் அவருக்குப் பதிலாக வேறொரு பிரபல விஞ்ஞானி அவருடைய பிரசங்கத்தை வாசித்தார்.

இக்கிரணங்கள் மூன்று வகையாக இருப்பதை "ரூதர்போர்டு" ஆராய்ந்து காட்டினர். அவைகளுக்கு முறையே ஆல்பா—கிரணங்களென்றும், பீடா—கிரணங்களென்றும் காமா — கிரணங்களென்றும் பெயரிடப்பட்டது. அவைகளில் ஆல்பா—கிரணங்கள் மிகுந்த ஆற்றலையும், பீடா — கிரணங்கள் மிகுந்த வேகத்தையும், காமா—கிரணங்கள் அதிகமான ஊடுருவும் தன்மையையும் பெற்றிருக்கின்றதை அறிந்தார். மேலும் ஆல்பா—கிரணங்கள் மிகைச் சுமையேறிய துகள்களென்றும், பீடா—கிரணங்கள் குறைக் கதிர்களைப்போல (Cathode rays) மின்னுருக்களின் அருவியே என்றும் காட்டினர். ஆனல் காமா-கிரணங்களில் ஒரு மின்சுமையும் இல்லாமலிருப்பதை அறிந்தார். நிற்க ஆல்பா—கிரணங்களைக் காட்டிலும் பீடா-கிரணங்களுக்கு ஊடுருவிச்செல்லும் சக்தி அதிகம் என்று அறியப்பட்டது. ஆனல் ஆல்பா—கிரணங்களின் அயனப்படுத்தும் திறமை (Ionisation power) பீடா—கிரணங்களைக் காட்டிலும் அதிகமாக இருப்பது காணப்பட்டது. அதாவது ஆல்பா—கிரணங்கள் போகும்போது அதைச் சூழ்ந்துள்ள காற்றணுக்களைச் சிதறச்செய்து அயனப்படுத்தும் விஷயத்தில் அதிகத்திறமை கொண்டிருப்பதை அறிந்தார்கள். காமா—கிரணங்கள் எக்ஸ்—கிரணங்களைக் காட்டிலும் ஊடுருவும் சக்தி அதிகம் பெற்றிருப்பதைப் பரீக்ஷை செய்து அறிந்தார்கள். இவை மின்சுமை இல்லாமலிருப்பதால் காந்தப் புலங்களினுலும், மின்புலங்களாலும் சற்றும் பாதிக்கப் படுவதில்லை. எனவே இவை எக்ஸ்—கிரணங்களை விட உயர்ந்த அடுக்கமும் (Frequency) குறைந்த அலை நீளமும் கொண்ட மின்காந்த அலைகள் என்று கருதப்படுகின்றன.

கதிரியக்கம் சூடு முதலிய பௌதிக நிலைகளினுல் பாதிக்கப் படுவதில்லை. மற்றும் இரசாயன மாறுபாடுகளும் அதைப் பாதிப்பதில்லை. கதிரியக்கத்தின் அளவு அதை வெளியிடும் தாதுவின் அளவை மட்டுமே சார்ந்திருக்கிறது. இதைக் கொண்டு கதிரியக்கத்தால் கனமான அணுக்கள் தாமாகச் சிதைந்து எளிய அணுக்களாக மாறுகின்றன என்று கருதப் படுகின்றது. நிற்க, மேற்சொன்ன கதிரியக்கம் தானுகவே ஏற்படுகிறது. இதைத் தூண்டவோ அல்லது நிறுத்தவோ நம்மால் ஆவதில்லை. அதாவது இக் கதிரியக்கம் இயற்கையாக நிகழ்வது. இந் நிகழ்ச்சியை அன்றி, தற்காலத்தில் விஞ்ஞானிகள் உயர்ந்த வேகத்தோடு செல்லும் மின்னுருக்களையும், ஆல்பா—துகள்களையும் குண்டுகளாகக் கொண்டு லேசான அணுக்களின் கருக்களை உடைத்துச் சிதைக்க முடியுமென்று கண்டிருக்கிறார்கள். எனவே இந்தச் செயற்கை அணுச் சிதைவினுல் ஒரு தாதுவை நாம் விரும்பிய மற்றொரு தாதுவாக மாற்றுவதும் வெகு விரைவிலே கைகூடி வரலாமென்று தோன்றுகிறது. ஆகையால் இழிந்த உலோகங்களை மாற்றுயர்ந்த பொன்னுக்க முயன்ற பண்டைக் காலத்து ரசவாதிகளின் கனவு உண்மையாகும் காலம் நெருங்கிவிட்டது போலும்.

# சீட்டுக் கச்சேரி

(டி. எஸ். ரமணி)

கோபாலய்யர் ஆரம்பித்த வேளேயோ, அல்லது துரைசாமி சாஸ்திரி பஞ்சாதி சொல்லிச் சீட்டைக் கலேத்துப்போட்ட லக்கினமோ! தினம் சீட்டுக்கச்சேரி ஓய்கிற தில்லே. ஆட்டத்திற்குப் பேர்வழிகள் இல்லே என்கிற கவலே கிடையாது. ஆறு பேரில் 504 ஆட்டம் போட்டால் பக்கத்தில் நான்கு பேர்வழிகளாவது பார்த்துக் கொண்டிருப்பார்கள். சிறு பிசகுக்கும் விவாதமில்லாமல் போகாது. இந்த சமயத்தில்தான் பார்த்துக்கொண்டிருப்பவர்களுக்கு நல்ல் 'சான்ஸ்' கிடைக்கும்.

'ஏண்டா துருப்பை வைத்துக்கொண்டு வெட்டவில்லே?'

'கடைக் கை யிருக்கும்போது நான் எதற்காக வெட்டவேண்டும்'? என்ருன் ராமு.

'ராமு சொல்வது சரி என்ருன் சீனு"

'அடே சீனு, நீஎப்போ ஊருக்கு வந்தே ?' என்ருர் கோபால அய்யர்.

ராமு குறுக்கிட்டான்: 'சீனு வந்து பதினைந்து நாளேச்சே. பி. ஏ. முடிந்தவுடன் வேலேக்கு அலேந்தான். வேலே கிடைக்கவில்லே. இப்போதுதான் எல்லாரும் கிராமத்திற்குப் போ என்கிருர்களே! வேறு வழியில்லே. ஊரோடு வந்துவிட்டான்.'

'அட பாவமே, அப்போதே சொன்னேனே, நாணு சாஸ்திரிக்கு, இந்த பி. ஏ. படிப்பு வேண்டாம் என்று! இரண்டு வேலி நிலம் விற்று முடிந்த பிறகா வரவேண்டும்?' என்ருர் துரைசாமி சாஸ்திரி.

'போடா போ, வந்தவன் என்னமோ சொல்லிக்கொண்டிருக்கிருன். நீ அவனேக் கேளேன்,' என்ருன் சுந்தரம்.

'எது எப்படி யிருந்தாலும் நமக்கு 'பேபர்' படித்து லோக விஷயம் சொல்ல ஒரு பையன் அகப்பட்டான்,' என்ருர் கோபாலய்யர்.

'முன்னே பதினைந்து வருஷத்துக்கு முன் இப்படித்தான் வைத்தியின் தம்பி படித்துவிட்டு வேலேக்குத் திண்டாடினன். அப்போது பிராமணனுக்கு ஜாஸ்தி வேலே கிடையாது என்று சொல்லிண்டா. அங்கும் இங்கும் அலேந்து கடைசியில் ஒரு கம்பெனியில் சம்பளத்துக்குப் போனன். இப்போ சௌக்கியமாக யிருக்கிருன். சீனுவும் அந்தமாதிரி அலேந்து பார்த்தால், ஏதாவது கிடைக்காமல் போகிறதா என்ன?' என்ருர் சீனுவின் மாமா கிட்டு, விட்டுக் கொடுக்காமல்.

'ஏண்டா சீனு, நீ என்ன பண்ணப் பொறே?' என்ருர் சாஸ்திரி குறுக்கே.

'நான் கிராமத்திலேயே யிருந்து கிராம புனருத்தாரண வேலேகளேச் செய்யப் போகிறேன்.' என்ருன் சீனு.

'அதுதாண்டா அவன் சொன்னது. அது என்னடா புதுவேலே? கேளு, பார்ப்போம்' என்ருன் சுந்தரம்.

'சீனு சொல்லுகிறது நல்ல வேலே தானே. 'பேபர்' படித்தால் உங்களுக்குத் தெரியும்' என்ருர் கோபாலய்யர். 'அதெல்லாம் கிடக்கட்டும். இன்றைக்கு பேபரில் என்ன விசேஷம்?'

சீனு:—பேபரில் ரொம்ப முக்கியமான விஷயமெல்லாம் இருக்கிறது மாமா! ஸிந்து மாகாணத்தில் காங்கிரஸ் தலேவர்கள் ஜனங்களுக்கு முதல்முதல் சுகாதாரம் பழக்கத்தில் வரவேண்டும் என்று தெருக்களேக் கூட்ட ஆரம்பித்தார்கள்.'

'பலே, வேறு வேலேயில்லேபோலிருக்கு' என்ருன் சுந்தரம்.

'ஏ:கட்டுப் பெட்டி! சொல்லுகிறதைக் கேளேன். இந்த நாளில் என்ன என்ன வேடிக்கை நடக்கப்போகிறதோ?' என்றான் ராமு.

'சரி, அப்பா, சொல்லு' என்றான் சுந்தரம் முணு முணுத்துக்கொண்டு.

சீனு:—மாமா, தலைவர்களும் மந்திரியும் இப்படி செய்தால் ஜனங்கள் தானே கற்றுக் கொள்கிறார்கள். இந்த காலத்தில் பேபரில் எவ்வளவு எழுதியும், வாயால் கத்தியும் புண்ணியம் என்ன? செய்து காட்ட ஆரம்பித்துவிட்டார்கள். இப்படிச் செய்தால் வீடு, தெரு சுத்தமாகும். கொசு, மலேரியா, காலரா முதலிய தொந்தரவு வராது. ஜனங்களும் வியாதியில்லாமல் வாழலாம்.


'வாஸ்தவம்தான். நாளைமுதற்கொண்டு நம்மாத்து வாசலில்கூட குப்பை கொட்டக்கூடாது. எதிரடியிலிருக்கிற எருக்குழியையும் தூர்த்துவிடுகிறேன்' என்றார் கோபால அய்யர்.

'நான்கூட ரொம்ப நாளாய்ச் சொல்ல வெண்டும் என்று எண்ணினேன். எப்படித் தங்களிடம் சொல்லுகிறது என்று பேசாமலிருந்துவிட்டேன்' என்றார் சாஸ்திரி.

'ஸிந்து மந்திரிகள் ஜனங்களுக்கு நல்ல வழி காட்டுகிறார்கள். கிராமத்திற்குப் போ என்கிறார்களே அது என்ன?' என்றார் கோபாலய்யர்.

சீனு:—இது தான் மாமா கிராம புனருத்தாரண திட்டம் என்பது. படித்தவர்களும் தலைவர்களும் கிராமங்களுக்குப்போய் ஜனங்களுக்கு நல்ல வழிகளைக் காட்டவேண்டியது. ஜனங்கள் செய்யாவிட்டால் தாங்களே செய்து காட்டவேண்டியது. ஜனங்கள் ஓய்வுநேரத்தில் சிறிய தொழிலைச் செய்து சம்பாதிக்கும் வழி, இப்போது வீணாக அடிக்கும் சாமான்களை உபயோகிக்கும் வழி, இவைகளெல்லாம் கிராம புனருத்தாரண திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும்.'

'ரொம்ப நல்லது சீனு, நீ ஊருக்கு வந்தது அதிர்ஷ்டம்தான். இதைப்பற்றி விரிவாகச் சொல்லு. ராத்திரி எல்லோரையும் கூப்பிட்டுக்கொண்டு வா, ராமு! எல்லோரும் கேட்கட்டும்' என்றார் கோபாலய்யர். இத்துடன் அன்று சீட்டாட்டம் கலைந்தது.



# செம்படவன் சொன்ன கதை

(எஸ். லக்ஷ்மி நாராயணன்)

ஒரு நாள் சாயங்காலம் நான் கடற்கரையில் நின்றுகொண்டிருந்தேன். வானம் கருமேகங்களால் சூழப் பெற்றிருந்தது. 'ஜில்'லென்று காற்று வீசியது. சில நிமிஷங்களில் சில மழைத் துளிகளும் விழுந்தன. அவ்வளவுதான்: ஜனங்கள் ஒவ்வொருவராக எழுந்து நடந்தனர். சில நிமிஷங்களுக்கெல்லாம் மெரீனு 'பீச்' வெறிச் சென்றிருந்தது. நான் சிறிது நடப்பதும் பின் சிறிது நிற்பதுமாயிருந்தேன். வரவரக் கரு மேகங்கள் அதிகமாகச் சூழவே, சமுத்திரமும் வானமும் ஒன்றை ஒன்று தொடுவது போல் தோன்றியது. நான் திரும்புவோமா வேண்டாமா என்று தயங்கி நிற்கும் சமயம், 'சாமி, சாமி,' என்று அழைத்துக்கொண்டே வந்தான் ஒரு செம்படவன்.

"என்னப்பா சமாசாரம்," என்றேன்.

"ஒண்ணுமில்லிங்க சாமி: இண்ணைக்கி இருப்பதைப் பார்த்தா, ரொம்ப நாளைக்கு முந்தி நடந்த சேதி ஞாபகம் வருதுங்க," என்றான் அவன்.

அவன் இடுப்பில் ஒரு கந்தல் துணி. கிழிந்த கோட்டுடன், தலையில் பாய்க் குல்லாவை அணிந்திருந்தான் அவன். நரை திரை விழுந்த பழுத்த கிழவனாயிருந்தான். ஒரு நிமிஷம் அவனை உற்று நோக்கியதும் அவனுடன் சில நிமிஷங்கள் வார்த்தையாடாமற் போகக்கூடாது என்று எனக்குத் தோன்றியதும், "சரி, என்னவோ சேதின்னு சொன்னையே, சொல்லு சீக்கிரம்," என்றேன்.

"ஒண்ணுமில்லிங்க, வளக்கம்போல நாங்க, ஏளு எட்டுப்பேரு ஒரு தோணிலெ ஏறிக்கினு மீன் பிடிக்கப் போனேம் சாமி. எனக்கு அப்போ வயசு முப்பது இருக்கும். பொழுது விடிய 4-மணிக் கெல்லாம் போனவங்க விடிந்து மணி 8 ஆச்சு, ஒரு மீனுகூட ஆப்படலிங்க அண்ணைக்கு. எனக்கானு ஆத்திரம் தாங்க முடியல்லே. என்னடா ஒருநாளும் இல்லாம இண்ணைக்கு புதுசாயிருக்குன்னு எண்ணிக் கிட்டிருந்தேன் பாருங்க, 'வள், வள்' ளின்னிச்சு ஜிம்மி. எங்களுக்கு தூக்கி வாரிப் போட்டுது. அடடா இருட்டிலே பாக்காமல்லா, வலையோட கொண்ணுந்துட்டோமின்னு நினைக்கல்லே, "அந்த மூதேவி, முவத்திலே, முளிச்சதுதான் இன்னைக்கு ஒரு மீனு நாச்சும், அம்புடலை இன்னான்" எம் மச்சான்.

"ஆமாண்டா, அண்ணிக்கெல்லாம் எவ்வளவு மீனு வந்திச்சு," இன்னான் இருளன்.

"அண்ணே, நீ கேட்டா கேளு, கேக்காட்டிபோ; முந்தா நா, உப்பு வாங்கிவரனும்னு போனேன். ஜிம்மி குறுக்கே ஓடிச்சுபாரு, திரும்பிவரேலெ, கல்தடுக்கி விழுந்து, கால்லெ ரத்தம் ஓடிச்சு. உப்பெல்லாம் மண்ணுப் போச்சு," இன்னான் மாடன்.

"ஆமாம், ஆமாம்." இன்னாங்க மத்தவங்களும்.

"இப்படி பேசிக்கிட்டே, சோறு நாச்சும் திங்கலாம்னு பாத்தா, அந்த பாளும் நாய் எங்க கஞ்சி யெல்லாத்தையும் கொட்டி குடிச்சுக்கிட்டிருந்திச்சு. எங்க வவுத்திலே வேறு மண்ணடிச்சிட்டியா இன்னு சொல்லி துடுப்பாலெ அடிச்சேன் பாருங்க, மண்டை உடைஞ்சு, முளி பிதிகிங், செத்தே பூட்டுதுங்க."

"அடா பாவி உனக்கு புத்தியிருந்துதாடா, உங்களுக்கு மீன் கிடைக்காட்டா, நாயை ஏண்டா கொன்னே," என்றேன் நான்.

"கேளுங்கசாமி, அதைத்தானே சொல்லணும்னு இருக்கேன். என் மச்சான் ஜிம்மியைத் தூக்கித் தண்ணிலே எறிஞ்சான் பாருங்க, மீன் எல்லாம் ஓடியாந்திச்சு.

இருளன் வலையை வீசினான். என்ன அதிட்டம் பாருங்க, வலையை இழுக்கமுடியாம அவ்வளவுமீனு கிடைச்சுதுங்க; இதுக்குள்ளார சூரியனும் உச்சிக்கு வந்துட்டான். தண்ணித்தாகம் நாக்க வறட்டித்திங்க. குடிக்கக் கஞ்சி இல்லாம பட்டினியா கிடந்தோம் நாங்க. "ஜிம்மி ஒளிஞ்சுது, வேண மீனு கிடைச்சுதுடா," இன்னு அவுங்க பேசிக்கிட்டேயிருந்தாங்க. எனக்கு நாய் செத்த புறவு, ஒண்ணும் ஓடலிங்க. நீங்க சொன்ன மாதிரி ஐயோ அநியாயமா ஜிம்மியைக்கொன்னு பூட்டுமே இன்னு சொல்லி வருத்தப்பட்டு, ஒருமாதிரிகுந்தியிருந்தேன். எவ்வளவு அடக்கியும், என்னாலே அளாமலிருக்க முடியலே."

"ஏ இருளா நம்ம முத்து என்னடா அளுதுகிட்டிருக்கான்; அவன் பொஞ்சாதிய நினைச்சுக்கிட்டானோ என்னமோ," இன்னு மத்த வங்க பேசிக்கிட்டாங்க. அவுங்களுக்குத் தெரியுமா? நான் ஜிம்மியை வளத்தது எம் பிள்ளை செத்ததுபோலயிருந்திச்சு சாமி எனக்கு.

"மணியும் 7-45 ஆயிற்று. பசி எடுக்கவே, 'சரி, சரி, உன் கதையைப் பார்கலே.' என்று நகர்ந்தேன்.

"சாமி, சாமி, இன்னும் கொஞ்சம் தான். நீங்க கேக்காட்டி எனக்கு ரொம்ப வருத்தமாயிருக்குங்க," என்று அவன் கெஞ்சவே, "சரி, சீக்கிரம் சொல், கேட்டுட்டு போறேன்," என்று நின்றேன்.

"பாருங்க சாமி, நா, பித்துப் புடிச்சாப்பில இருக்கேல, அவுங்க தோணியை ஓட்டிக்கிட்டு வந்தாங்க. வந்துகிட்டேயிருந்த தோணி திடும்ன அலைஞ்சுதிங்க, எங்களுக்கெல்லாம் திக்கு திக்கென அடிச்சிக்கிட்டுதிங்க. ஒரு நாளும் தோணி அந்த மாதிரி அலைஞ்சது கிடையாதுங்க. பாயைக் கட்டணும்னு எளுந்திருச்சேன் பாருங்கொ, அலைஞ்சிக்கிட்டிருந்த தோணி அப்படியே கவுந்திட்டதுங்க, தண்ணில விளுந்ததும் தத்தி பித்தித் தோணியைப் பிடிக்கணும்னு பாத்தோம் முடியலிங்க. ஒரு பெரிய சுறு மீன் வந்திச்சி பாருங்க,வாலாலே ஒரு அடி அடிச்சுது பாருங்க. எனக்கு உடம்பெல்லாம் ரத்தம் பீறிக்கிட்டு ஓடிச்சுதான் தெரியுங்க. தப்பினேன் பிளேச்சேன்னு நீந்தி, நீந்தி ஓடியாந்தேன். எவுங்க புண்ணியமோ தெரியல. ஒரு துடுப்புக் கட்டை கிடைச்சுதுங்க, அதைப் பிடிச்சிக்கிட்டே வந்தேன் சாமி, நானும் கரைக்கு வந்தேன், சூரியனும் மறைஞ்சிட்டான். அப்பொ இம்மாதிரி இங்கு சனக் கூட்டம் ஒண்ணு கிடையாதுங்க. எங்க மகமாயி மாரியம்மனை நினைச்சுக்கிட்டே வூட்டுக்கு போனேன். அண்ணைக்கி போனவங்கதான் சாமி. எங்க மச்சானும் மத்தவங்களும். இன்னம், இனிப் பொளுதும் வந்தபாடில்லிங்க. அவுங்க உடலைக் கூட காணலிங்க. அவுங்க பொஞ்சாதி பிள்ளைங்க பிச்சையெடுத்து வவுறு வளக்குதுங்க சாமி. நாங்க போவதுக்கு முத, நா இப்படித்தான் யிருந்துச்சிங்க மானம். இம் மாதிரி மானத்தைக்கண்டா, எனக்கு அந்த நினவு வருதுங்க; எனக்குப் பிள்ளமாதிரி யிருந்த ஜிம்மியை நினைச்சா என் வவுறு எரியுதுங்க: நடந்தத சொல்லத் தோணுதுங்க; இல்லாட்டி உசுரே போயிரும் போலிருக்குங்க, நினைவு வந்திச்சு; நீங்களும் இருந்து கேட்டிங்க. நானும் நடந்ததை சொன்னேன் சாமி. பாவம், எம்மச்சானும், மத்தவங்களும் ஒண்ணும் செய்யலிங்க சாமி; அவுங்களுக்கு அக் கதி நேந்திச்சிங்க. நாம்மட்டும் புளைச்சுக்கிட்டேன். எல்லாம் கிளக்கெ உதுச்சு மேக்கெ அடையுறுனே அவனுக்குத்தான் வெளிச்சங்க," என்று சொல்லி நடந்து சென்றான் அவன்.

அதைக் கேள்வியுற்ற எனக்குப் பல எண்ணங்கள் அலைமேல் அலையாக எழும்பின. சில நிமிஷங்கள் மனதுடன் போராடின பின், ஒரு புதிய உணர்ச்சி ஏற்பட்டதும், மனதைச் சாந்தப்படுத்திக் கொண்டு நடந்து சென்றேன்.

(ஆங்கில கவி ஸாமுவேல் டெய்லர் காலரிட்ஜ் எழுதிய புராதன மாலுமியின் கதையாகிய (The Rime of the Ancient Mariner) என்பதைத் தழுவி எழுதியது)




# நான் ராஜாவாக இருந்தால்

(பெ. நா. அப்புஸ்வாமி ஐயர், பி.ஏ., பி.எல்.)

ராஜாராமையர் சுடச் சுடக் காப்பியைக் கையில் வைத்துக் கொண்டு மெதுவாகச் சொகுசாகக் கொஞ்சம் கொஞ்சமாக உறிஞ்சி அனுபவித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். "நான் ராஜாவாக இருந்தால் என்ன செய்வேன்? தெரியுமா?" என்றார்.

அதற்குச் சுப்பையர், "ஏன்? நீ ராஜா தானே" என்றார்.

"பேரில் ராஜாதான். நிஜமாக ராஜா இல்லையே"

"இருந்தால்?"

"காப்பியைக் கண்டுபிடித்த மகானுக்கு லக்ஷம் — இல்லை, கோடி — இல்லை, என் அரசாங்கப் பொக்கிஷசாலையையே கொடுத்து விடுவேன்."

"அப்படியா? நல்ல வேளை தான் நீ ராஜாவாக இல்லை! ஆனால் இன்னொன்று. நீ சொன்னாயே அந்த மகான். அவர் உன்னுடைய பொக்கிஷத்தைத் திரணமாக — இல்லை, ஓட்டாஞ் சல்லிக்குச் சமானமாகவே மதிப்பார். அதற்குச் சந்தேகமில்லை."

"ஏன்? அவர் சந்நியாசியா என்ன? சந்நியாசிகள் கூட மடத்துக்காகப் பணம் வாங்கிக்கொள்ளுகிறார்களே. அவருக்குப் பணம் வேண்டாமென்றால், அவருக்கு வேறு எது வேண்டுமானாலும் கொடுப்பேன்" என்றார் ராஜாராமையர்.

"பச்சைத் தழையும் பசும் புல்லும் தான் அவருக்கு மிகவும் பிரியமானவை."

"அவர் என்ன ரிஷியா? அல்லது வைடமீன் பேர்வழியா? அல்லது வெறும் பயித்தியம்தானா?"

"ஒன்றும் இல்லை."

"பின்னே யாரடா அந்த அதிசயப் பேர்வழி? பொக்கிஷசாலையே வேண்டாமென்று தள்ளுகிறவர், அவர் கொம்பு முளைத்தவராகத்தான் இருக்கவேண்டும்."

"நீ சொன்னது சரி"

"எது சரி? புதிர் போடாமல் சொல்லு"

"காப்பியைக் கண்டுபிடித்தது அபிசீனியா தேசத்து ஆடு"

"வெறும் வம்புப் பேச்சுப் பேசாதே சுப்பையா. பஞ்ச தந்திரக் கதையா, ஆடும் மாடும் கண்டு பிடிப்பதற்கு? நிஜமாக நேரே சொல்லு."

"நான் நிஜத்தைத்தான் சொல்லுகிறேன். ஆனால், காப்பியைக் கண்டுபிடித்த விருத்தாந்தத்தைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். படித்து மிருக்கிறேன். அந்தக் கதை பல புஸ்தகங்களில் பல விதமாகச் சொல்லப்படுகிறது. நீ நேரே கேட்பாயானால் சொல்லுகிறேன்."

"சொல்லித் தொலை."

"அப்படி என்றால்?"

"மகாராஜராஜஸ்ரீ சுப்பையரவர்களே, தயவுசெய்து, பெரிய மனது பண்ணி, அடியேனுக்குச் சொல்லி அருளுங்கள் என்று பொருள்! சொல்லுடா, சுப்பையா."

"அப்படியானால் அவசரப்படாதே. பொறு. இது பழைய காலத்துக் கதை. சுமார் ஆயிரத்து ஐந்நூறு, ஆயிரத்துஅறு நூறு வருஷங்களுக்கு முன்னாலே நடந்ததாகச் சொல்லப்படுகிறது. இது நடந்தகாலத்தில் கிறிஸ்தவ மதம் ஏற்பட்டு அதிக நாளாகவில்லை. அந்த மதமும் மிகவும் எளிய நிலையில் இருந்தது. அதனால் அந்த மதத்தைச் சேர்ந்தவர்களை மற்ற மதத்தினர்கள் எத்தனையோ வகையாய் இம்சித்து வந்தார்கள். இம்சையைத் தாங்கமுடியாத சில கிறிஸ்தவச் சந்நியாசிகள் அரேபியாவிலிருந்து செங்கடலைத் தாண்டி அபிசீனியாவுக்கு ஓடிப்போனார்கள். அங்கே உள்ள மலைப்பிரதேசத்திலே ஒரு புறத்திலே கஷ்டப்பட்டு வாழ்ந்துவந்தார்கள். முதலில் காட்டு மிருகங்களைப்போலக் குகைகளில் வசித்துவந்தார்கள். பிறகு குடியிருக்கச் சின்னஞ்சிறு மடங்களைக் கட்டிக்கொண்டார்கள். கரடுமுரடான பூமியை அரும்பாடுபட்டுப் பயிர் செய்வதும், ஆடு முதலிய கால்நடைகளை வளர்த்து விருத்தியாக்குவதும் அவர்களுடைய ஜீவனோபாயமாக இருந்தது.

அப்படியிருக்கும் பொழுது, ஒரு நாள் இராத்திரி நடுநிசி வேளையில் ஆட்டு மந்தையை மேய்த்துக்கொண்டிருந்த சந்நியாசி ஒருவன் மூச்சுத்திணற மடத்துக்குள் ஓடிவந்து, பரக்கப் பரக்க விழித்தான். அவனுடைய உடல் நடுங்கக் கைகால் விலவிலக்க, நாக்குழற, அவன் ஏதோ சொன்னான்.

"என்ன? என்ன?" என்று மடத்திலுள்ளவர்கள் பரபரப்புடன் கேட்க, அவன் 'சைத்தான் வந்துவிட்டான்! சைத்தான் வந்துவிட்டான்! ஆடுகளெல்லாம் பாதிராத்திரி வேளையில் குதிக்கிறதும், பாய்கிறதும், தாவுகிறதும், ஆடுகிறதுமாக இருக்கின்றன. இந்த மாதிரி நான் இதுவரை பார்த்ததே இல்லை. ஆடுகளுக்குப் பேயோ பிசாசோ பிடித்துவிட்ட மாதிரியாகத் தோன்றுகிறது. பார்த்தால் பயமாயிருக்கிறது. இது நிச்சயமாகச் சைத்தானுடைய வேலையாகத்தான் இருக்க வேண்டும்' என்று ஒருமட்டுக்குச் சொல்லிமுடித்தான்.

அதைக் கேட்ட மடத்தலைவர் 'ஆட்டுக்காவது பேய்பிடிக்கவாவது? பக்தர்களாகிய நம்மிடம் சைத்தான் ஒருபொழுதும் வாலை ஆட்டமாட்டான்! நீ கனவு கண்டிருப்பாய். எதற்கும் நான் போய்ப் பார்த்துவருகிறேன்' என்று புறப்பட்டார்.

ஆடுகளெல்லாம் அந்த வேளையில் மந்தையில் படுத்து உறங்கிக்கொண்டிருக்கும் என்று அவர் எண்ணினார். ஆனால் அன்று நிலவு வெளிச்சத்தில் அவர் கண்ட காட்சி அவரைத் திகைக்கும்படி செய்துவிட்டது. நிச்சப்தமான பாதிராத்திரி வேளையில் மந்தையிலுள்ள ஆடுகளெல்லாம் வெறிபிடித்தமாதிரி ஓடியாடித் தாவிக் குதித்து விளையாடுவதைக் கண்டார். சைத்தான் வேலைதானென்று எண்ணி மந்திரங்களை ஜபித்தார். ஜபித்து ஜலத்தை எடுத்து ஆடுகளின் மேல் தெளித்தார். ஆடுகளின் கும்மாளம் குறையவே இல்லை. அவர் பிரமித்துப்போய் மடத்துக்குத் திரும்பினார். மறுநாள் இரவிலும் இதேமாதிரி நடந்தது. மடத்தில் பூஜைகளும் ஜபங்களும் தோத்திரங்களும் நடந்தும், பிசாசை வெருட்டப் பலவகையான முயற்சிகள் செய்தும் ஒன்றும் பலிக்கவில்லை. ஒவ்வொரு நாள் இரவிலும் ஆடுகள் கூத்தும் கும்மாளியுமாகவே காலத்தைக் கழித்தன.

பிறகு, ஆடுகள் எங்கே மேய்கின்றன? என்ன என்ன தின்கின்றன? என்று கவனித்தார்கள். அங்கே மலைப்புறத்திலே, செழிப்பாக மரம்போல் வளர்ந்திருந்த ஒரு காட்டுச் செடியின் இலையையும் காய்களையும் ஆடுகள் மிகுதியாகத் தின்றுவந்தன என்பது தெரியவந்தது. அந்தச் செடியின் இலை கரும் பச்சையாய் இருந்தது. அதன் பூ வெள்ளை வெளேரென்று மல்லிகைப் பூவைப்போல் வாசனையுள்ளதாயிருந்தது. அதில் கொத்துக் கொத்தாய்க் காய்த்திருந்த காய்கள் பச்சையாய்ச் சுண்டைக்காயைப்போல் இருந்தன. அதன் பழமோ செக்கச் செவேலென்று இலந்தைப் பழத்தைப்போல்

இருந்தது. அந்தச் செடி இன்ன செடி என்பது அவர்களுக்குத் தெரியாது. அந்த மடத்துத் தலைவர் செடியின் இலையையும், பழத்தையும் பறித்து வாயில் போட்டு மென்று பார்த்தார். பழம் தித்திப்பாக இருந்தது. பழத்துக்குள்ளே விதை இருந்தது, அதையும் கடித்துப் பார்த்தார். உடனே தனக்கு ஒருவிதமான கிளர்ச்சியும் உற்சாகமும் ஏற்படுவதை உணர்ந்தார். அன்று அவருக்குக் களைப்பு ஏற்படவில்லை. இரவிலும்கூடத் தூக்கம் வரவில்லை. புத்தியும் சுறுசுறுப்பாகவே இருந்தது. ஆடுகள் போடும் கும்மாளத்துக்குக் காரணம் அந்தச் செடிதான் என்பதைத் தன்னுடைய அனுபவத்திலிருந்து தெரிந்துகொண்டார். அந்தச் செடிதான் காப்பிச்செடி. அதன் மகிமையை-முதன் முதலில் கண்டுபிடித்து அனுபவித்ததும் உலகத்துக்குத் தெரியப்படுத்தியதும் ஆடு, தெரிந்ததா?" என்றார் சுப்பையர்.

"ஆடே! உன் பெருமையே பெருமை. உன்னைக் கோயிலில் வைத்துக் கும்பிட வேண்டும்" என்றார் ராஜாராமையர்.

"கோயிலிலே அந்த ஒரு தெய்வம் தான் பாக்கி" என்றார் சுப்பையர்.

"அப்படிச் சொல்லுடா, சுப்பையா. ஆடா கண்டுபிடித்தது,காப்பியை? அதன் புத்தியைப்போலத்தானே இருக்கும் அது கண்டுபிடித்ததும்? பழைய நாளிலே பழையதும் தயிருமாகச் சாப்பிடுவார்கள். இது என்ன காப்பியும் கீப்பியும்?" என்றாள் ராஜாராமையரின் தாயார் குப்புப் பாட்டி.

"பாட்டி! நீ வேண்டுமானால் பழையது சாப்பிடுகிறதுதானே?" என்று தகப்பனுக்குப் பரிந்து பேசினான் பாட்டியின் செல்லப்பேரன் கிட்டு.

"போடா அசடு! பாட்டியைப்பார்த்து அப்படியா பேசுகிறது?" என்று கடிந்தார் ராஜாராமையர்.

"பின்னே என்னைப்பார்த்து ஏன் சொன்னாள் பாட்டி?" என்று முணு முணுத்தான் பையன்.

"குழந்தையைக் கோபித்துக் கொள்ளாதே, ராஜா" என்றாள் பாட்டி.

"அது கிடக்கட்டும். காப்பி குடிப்பது நல்லதா? கெட்டதா?" என்றாள் ராஜாராமையரின் தங்கை பார்வதி அம்மாள்.

"கெட்டதுதான். அதற்குச் சந்தேகமென்ன?" என்றாள் குப்புப் பாட்டி.

"நீ சொல்லு, சுப்பையா" என்று தூண்டினார் ராஜாராமையர்.

"இது வம்புதான். இருந்தாலும், குப்புப்பாட்டி! நீ கோபித்துக்கொள்ளாதே எனக்குத் தெரிந்ததைச் சொல்லுகிறேன்."

"சொல்லு, சுப்பையா." என்று சம்மதித்தாள் பாட்டி.

"பொதுவாகக் காப்பி நல்லதுதான் என்று சொல்லவேண்டும். மிதமாகச் சாப்பிட்டால் நிச்சயமாக நல்லதுதான். அதிகமாகச் சாப்பிட்டால் கெடுதல் செய்யலாம், செய்யவும் செய்யும். எதுதான் செய்யாது? சிலருக்குக் காப்பி குடித்தால் தூக்கமே வராது. அவர்கள் காப்பி குடிக்காமல் இருப்பது நல்லது. பொதுவாகக் காப்பிக் குடித்தவுடன் மூளை சுறுசுறுப்படைகிறது"

"கள்ளுக்குடித்தால் கூடத்தான் சுறுசுறுப்பாக இருக்கிறது, என்று சிலபேர்கள் சொல்லுகிறார்கள்" என்று ஆக்ஷேபித்தாள் பாட்டி.

"இது அந்தமாதிரி இல்லை. நிஜச் சுறுசுறுப்பு. கள், சாராயம் முதலிய லாகிரி வஸ்துக்களால் உண்டாகும் பொய்ச் சுறுசுறுப்பைப் போல் அல்ல. அவற்றைச் சாப்பிட்டால் முதலில் கிளர்ச்சி உண்டாகலாம். உண்டானாலும் பின்னால் அதற்கு ஏற்றபடி சோர்வு உண்டாகும். தளர்ச்சி உண்டாகும். காப்பியினால் அந்தமாதிரியான தீங்கு ஒன்றும் உண்டாகாது. இதற்குச் சமானமாக வேறொன்றையும் சொல்லமுடியாது."

"என்னைவிடக் காப்பியின்மேல் உமக்கு மோகம் அதிகம்போல் தோன்றுகிறதே" என்றார் ராஜாராமையர்.

"இந்தச் சுறுசுறுப்பு எதனால் உண்டாகிறது?" என்று இன்னொரு கேள்வி கேட்டாள் பார்வதி.

"காப்பிக்கொட்டையிலே காப்பீன் என்ற ரசாயனப் பொருள் ஒன்று இருக்கிறது. அதுதான் காரணம் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்தப் பொருளைத் தனியாகவும் பிரித்தெடுக்கலாம். வெள்ளை வெளேரென்று பட்டுப் போலப் பொடியாக இருக்கும். இந்தப் பொடியை மருந்தாக உபயோகப்படுத்துகிறார்கள். தேயிலையிலும் இந்தச் சத்து இருக்கிறது. காப்பியில் இருப்பதைவிடச் சற்று அதிகமாகவே தேயிலையில் இருக்கிறது."

"அதனால்தானோ டீ போட்டுக் குடித்தால் எனக்குத் தூக்கமே வருகிறதில்லை?" என்றார் ராஜாராமையர்.

"காப்பிக்கொட்டை பச்சைக் கொட்டையிலிருந்து அது லேசாகக் கிடைப்பதில்லை. பச்சைக்கொட்டையைக் கொண்டு கஷாயம் போட்டால் அது வாய்க்கும் நன்றாக இராது, அதற்குக் குணமும் அவ்வளவுஇராது. வறுத்த பிறகுதான் இந்தச் சத்து கஷாயத்தில் லேசாக இறங்குகிறது. கருகிப் போகும்படி கொட்டையை வறுத்துவிடவும் கூடாது. அப்படி வருத்தால் இந்தச் சத்தில் கொஞ்சம் ஆவியாகப் போய்விடும். கொட்டைக்கும் கரி வாசனை வந்து விடும்."

"நல்ல வாசனை! போனதடவை காப்பி நன்றாயில்லை" என்றார் ராஜாராமையர்.

"காப்பியைத் திக்காகப் போட்டுச் சாப்பிடுகிறது நல்லதா? அல்லது வெந்நீரைப்போல் லேசாகஇருக்கவேண்டுமா?" என்று பேச்சை மாற்றினார் ராஜாராமையர்.

"சுமாராகத் திக்காகத்தான் இருக்க வேண்டும். பொடியையும் அப்போதைக்கப்போது அரைத்துக் கொள்ளுவது தான் நல்லது."

மெதுவாகத் தன் மனைவியைத் திரும்பிப் பார்த்தார் ராஜாராமையர். அவளும் உடனே, "ஏன்? மொத்தமாக இடித்து வைத்துக் கொண்டால் என்ன?" என்று கேட்டாள்.

"அக்கம் பக்கத்திலுள்ள வாசனைகளையெல்லாம் இழுத்துத் தன்னுள் ஏற்றுக் கொள்ளும் சக்தி காப்பிப் பொடிக்கு உண்டு. பெருங்காய வாசனை, மஞ்சள் வாசனை, கெரோஸினாயில் வாசனை, சென்ட் வாசனை முதலிய எல்லாவற்றையும் அது பிடித்துக்கொள்ளும்."

"அதனால்தான் எங்கள் வீட்டுக் காப்பி ஒவ்வொரு நாள் ஒவ்வொருவாசனையாயிருக்கிறதோ?" என்றார் ராஜாராமையர்.

"காப்பியைச் சூடாகச் சாப்பிடுகிறது நல்லதா? பனிக்கட்டிபோலக் குளிரச் செய்து சாப்பிடுவது நல்லதா?" என்றாள் பார்வதி அம்மாள்.

"நாக்குக்கு ருசி எப்படியிருந்தாலும். மிகுதியான சூடும், மிகுதியான குளிர்ச்சியும் உடம்புக்குக் கெடுதல்தான். காப்பியைக்கொதிக்கக் கொதிக்கச் சாப்பிட்டால் நாக்குப் பொத்துப்போகும். தொண்டையும் வயிறும் கூடப் புண்ணாய்ப்போகும். அதேமாதிரி, மிகவும்குளிர்ந்துபோன காப்பியைச் சாப்பிட்டாலும் தொண்டைக்கும் வயிற்றுக்கும் சீதளம் ஏற்பட்டுக் கெடுதல் உண்டாகும். உடனே வறுத்து, உடனே அரைத்து, உடனே போட்டு நிதானச் சூடாகச் சாப்பிடுவதுதான் நல்லது. காப்பியும் கமகம என்றிருக்கும்."

"ராஜாவாக இருந்தால் அந்தமாதிரி நடத்தி வைக்கலாம்" என்றாள் பார்வதி அம்மாள்.

"காப்பி கெடுதலே இல்லையா?" என்றாள் பாட்டி.

"அவசரப்படாதே, பாட்டி. காப்பிசாப்பிடத் தொடங்கிவிட்டால் அப்புறம்அதை லேசாக விடமுடியாது. அந்த வழக்கம் பிடித்துக்கொள்ளும். காப்பியை நிறுத்தினால் தலைவலி வரும். என்னவோ மாதிரி இருக்கும். இது ஒரு கெடுதல்தான்.

"அப்பா, சுப்பையா, ஒரு குறையாவது சொன்னாயே. அந்த மட்டுக்கு நல்லவன்தான்," என்றாள் பாட்டி.

"நான் ராஜாவாக இருந்தால் பழையதைத்தொலைத்துவிட்டுத் தான் மறுகாரியம் பார்ப்பேன்" என்றான் பேரன் கிட்டு.

# இண்டோ கமர்ஷியல் பாங்கி லிமிடெட்.

ரிஜிஸ்டர்டு ஆபீஸ் :- மாயவரம்

சென்ட்ரல் ஆபீஸ் :- சென்னை

| | | |
|---|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் | ... ரூ. | 25,00,000 |
| வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ... ரூ. | 21,25,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் 20-10-39 | ... ரூ. | 18,23,832 |

சென்னை ஆபீஸ்கள்

அரண்மனைக்காரத் தெரு, சைனு பஜார் ரோடு, மாம்பலம், மைலாப்பூர், திருவல்லிக்கேணி.

கிளை ஆபீஸ்கள்

| | | | |
|---|---|---|---|
| அனகபல்லி | கோயம்பத்தூர் | புதுக்கோட்டை | திருவாரூர் |
| பர்ஹாம்பூர் | காரைக்குடி | சேலம் | திருச்சிராப்பள்ளி |
| கள்ளிக்கோட்டை | கும்பகோணம் | சீயாழி | தூத்துக்குடி |
| சிதம்பரம் | மதுரை | தாடபள்ளிகூடம் | வெல்லூர் |
| கஞ்சீவரம் | நாகப்பட்டணம் | தஞ்சாவூர் | விருதுநகர் |
| ஈரோடு | பாலக்காடு | திருநெல்வேலி | விஜயநகரம் |

பாங்கி சம்பந்தமான எல்லா விஷயங்களும் கவனிக்கப்படும்.

எஸ். என். என். சங்கரலிங்க ஐயர்

(மானேஜிங் டைரக்டர்)



# பரசுராம சித்த ஔஷதாச்ரமம்

திருவண்ணாமலை தலைமை ஆபீஸ்.

59-A, லாய்ட்ஸ் ரோடு,*
ராயப்பேட்டை, மதராஸ்.
(பிராஞ்சு)

நீடித்த வியாதிகளை, முப்பு குருவால் செய்த ஔஷதங்களால் நிவர்த்தி செய்யப்படும். டீயூபர்குலோஸிஸ் என்ற க்ஷய ரோகத்திற்கும், நீரழிவு ரோகத்திற்கும் விசேஷ ஔஷதங்கள் இருக்கின்றன.

## முப்புகுரு சேர்ந்த "சித்த எண்ணெய்"

இது சர்வரோக நிவாரணி, பரம சஞ்சீவி. ஒரு தடவை உபயோகித்தால் இதன் பெருமை தெரியும். அனேக டாக்டர்களால் பரிசீலனை செய்யப்பெற்றது. குழந்தைகள் பால் கட்டிகளுக்கும், ஈரல் கட்டிகளுக்கும் நிகரற்ற ஔஷதம்.

ஸோல்டிஸ்டிரிபியூடர்ஸ் : ஸாரதா ஸ்டோர்ஸ், காரைக்குடி.

ஸ்டாக்கிஸ்ட்ஸ் :

அப்பா அண்டு கம்பெனி, மதறாஸ்.

T. N. நாகலிங்கம் பிள்ளை, மதுரை.

மீனாக்ஷி ஸ்டோர்ஸ், தேவகோட்டை.

T. N. சொக்கலிங்கம் பிள்ளை, அண்டு சன்ஸ், மதுரை.

* டாக்டர் பரசுராம் அவர்கள் மதராஸ் வாசிகளின் சௌகரியத்தின் பொருட்டுப் பலர் வேண்டுகோளுக்கிணங்கி, ஒவ்வொரு ஆங்கில மாதமும் 1-ம் தேதிமுதல் 10 தேதிகள்வரையில் பிராஞ்சு ஆபீஸில் தங்குவார்.

# சினிமாச் சுருள்

'எஸ். எஸ்.'

"பாண்டுரங்கன்", பிராட்வேயிற்கு விஜயம் செய்யப்போகிறாரென்றும், அவரை வரவேற்பதற்காகவே, வேல் முருகன் பிலிம் சர்வீஸார்கள் ஏகப்பட்ட ஆடம்பரஞ் செய்துகொண்டு இருக்கிறார்களென்றும் நாகரா பாண்டு முதலிய வாத்தியங்களின் கோஷ மூலம், அறிவிக்கப்படுகிறோம். பாண்டுரங்கனைத் தரிசித்து எல்லோரும் பேரின்பம், என்னும் பேரானந்தத்தை அடையுங்கள். அடையுங்கள்...என்று சொல்வதுபோல், பத்திரிகைகளின் வாயிலாகவும், சந்து, பொந்து முதலிய இடங்களிலுள்ள சுவர்களின் வாயிலாகவும், மற்றும், துண்டுப் பிரசுரங்களின் வாயிலாகவும், ஒருவர் விடாமல், எல்லோருக்கும் தெரிவிக்கும் வண்ணம், வேல்முருகன் பிலிம்ஸார்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்களாம். ஏதோ என்னைப்போலுள்ளவர்களுக்கு, பண்டரீபுரம் சென்று, சந்திரபானு நதியில் நீராடி, விடோபா சமேத, பண்டரீ நாதனைத் தரிசிக்க முடியாமல் போனாலும்கூட, பிராட்வே என்கிற கோவிலினுள் தற்காலிகமாய் வீற்றிருக்கப்போகும், எம்பெருமானைக் கண்டு, தொழலாம் வாரீர்...... வாரீர்......என்று அழைப்பதுபோல், மணியோசை, கூடிய சீக்கிரம் ஒலிக்கப் போகிறதாம்.

*　　*　　*

அப்பப்பா, இந்த எழவெடுத்த ஹிட்லர், யாருடனோ, எங்கேயோ சண்டை தொடுக்கப் போக, எங்களுக்கெல்லாம் முட்டுக்கட்டை போட்டு விட்டானே என்று,சினிமாத்துறையில் ஈடுபட்டுள்ள, ஸ்டுடியோக்காரர்கள், பட முதலாளிகள் முதல், நமது ஸினிமா பார்க்கும், மஹா ஜனங்கள் வரை, வசை மாரி என்ற சகஸ்ரநாம அர்ச்சனையைச் சரமாரியாகப் பொழிந்து வருகிறார்கள். காரணம், இந்தியாவில் இருக்கும் ஸ்டுடியோக்காரர்களெல்லாம் ஜெர்மன் பிலிமான ஆக்பாவை (Agfa) உபயோகித்துவந்ததும், யுத்தத்தினால் இங்குள்ள, அக்கம்பெனிகள் எல்லாம் பிரிட்டிஷ் சர்க்காரால் ஸீல் வைக்கப்பட்டதுமேயாகும். இதனால், முக்கால்வாசி எடுக்கப்பட்டுள்ள படங்களெல்லாம், அப்படியே தங்கிக் கிடக்கின்றனவாம். இவர்களுடைய நிலைமை இம்மாதிரியிருக்க, படப் பிடிப்பிற்கு முதன் முதலாகத் தொடங்கியுள்ளவர்கள்கொஞ்சம் தேவலை என்றுதான் சொல்ல வேண்டும். கடன் வாங்கிய பணமெல்லா வற்றையும் போட்டு, திரிசங்கு சொர்க்கத்தில் நிற்கவேண்டாமல்லவா ?

*　　*　　*

கன்னடபாஷை பேசும் அஸ்வத்தம்மா தமிழ்ப்படத்தில் நடித்து ஒரு வாறு வாரவில்லையா ? அதைப்போல் நாமும் செய்யலாமே என்று நினைத்தார்களோ என்னமோ ? ராஜகோபால் டாக்கிஸார்கள் உடனே ஓடோடியும் சென்று, பல தெலுங்குப் படங்களில் நடித்துப் புகழ் பெற்றிருக்கும் கண்ணாம்பா சகிதம் வந்து, தற்சமயம், தமிழ் அக்ஷராப்பியாசம் செய்து வைத்துக்கொண்டிருக்கிறார்களாம். கிருஷ்ணன் தூது, அக்னிப் பிரவேசம் ஆனாலும் ஆயிற்று, திரௌபதியின் பாகத்திற்கு அநேகர் ஆஜராயிருக்கின்றனர். முதலில் M. R. சந்தானலக்ஷ்மி திரௌபதியாக நடிக்கப் போகிறார் என்று கேள்விப்பட்டதும், அடிச்சார்கள் பிரைஸ் ராஜகோபால் டாக்கிஸார்கள் என்று நினைத்தேன். ஆனால் இப்பொழுது அதே வேடத்தில் கண்ணாம்பா பிரவேசித் திருப்பதைப் பார்த்தால், அடித்தார்கள் ஒரு லக் (Luck) என்றுதான் சொல்ல வேண்டும்.

---